தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆடி 9 (25-7-'59) | சனிக்கிழமை | இதழ் 6

நாளையப் போரின்
தளபதிகள்
நாமேயல்லால்
வேறெவரோ?

பரந்துகிடக்கும் உலகம்! அதில் விரிந்துகிடக்கும் கடல்! கடலில் அலைந்தெழும் ஆயிரம் கதைகள்!- அவ்வளவும் வாழ்வைச் சிந்திக்க வைக்கும் பேருண்மைகள்!

உயிர் போகலாம்; உடல் சிதையலாம்; வாழ்வு அழியலாம்; வாதைகள் சூழலாம்; என்றாலும் நாம் மேற்கொண்டுள்ள போராட்டத்தின் வெற்றி தலைமுறை தலைமுறைக்குப் பெருமை தரும். போர் இன்று வெடிக்கும்; நாளை சிதறும் என்று காத்திருக்காது இந்தப் படை! புன்மைசெய்த பகையைக்குமைக்கக் காலத்தைப் பார்க்காது; களத்தைப் பார்க்கும்! ஆனால் ஒன்று...

ஆண்டு பலவாக, மீனவர் பல்லாயிரவர் அந்தக் கடலின் கொடுமைகளை அறிந்திருக்கின்றனர். ஆனாலும் அவர்கள், அஞ்சி சாவதில்லை!

இன்றிறந்தால் நாளைக்கு இரண்டாம் நாள்; அதற்கடுத்த நாள் மூன்றும்நாள். இருக்கும் நாளெல்லாம் பொறுப்புடனும் புகழுடனும் வாழவேண்டியது அவன் கடன். அவனை நம்பியுள்ளது ஒரு குடும்பம். கொண்ட மனைவியும் பெற்ற பிள்ளையும் அவனது உழைப்பினால் பயன்பெற வேண்டியோர். அவர்கள் மட்டுமல்ல; அவர்கள் வாழும் நாடும்கூட அவனைபபோன்ற பல்லாயிரவரை நம்பித்தான் இருக்கிறது. அவன் தன் பொறுப்பைத் தட்டிக்கழித்து விடலாம், பட்டைச்சோற்றுப் பேர்வழிகளைப்போல. ஆதலால் தன்மானம் உழைக்கச் செய்கிறது; கடலின் பயங்கரங்களையும் மறந்து ஓடுகிறான்; அலைகிறான்; உழைக்கிறான்! தன் வருங்காலச் சந்ததியினரையும் உழைக்கத் தூண்டுகிறான். வாழ்க்கை போர்க்களமாகிறது. அது கடல் உருவில் வருகிறது. என்றாலும் அஞ்சாது கடலைக்குடைகிறான். காலையில் செல்பவன் பலநாள் கழித்தும் வருகிறான். அவன் வருவான் என்பதை யாரும் நிச்சயமாக நம்புவதற்கில்லை. வந்து சேர்ந்தால் உண்டு; அல்லது கடல்மகளின் அலைக்கைகளில் வளைப்புண்டு, அவள் தானை முத்தமிடுவதும் உண்டு. என்றாலும் அஞ்சாது செல்லவேண்டும் என்பது காலம் அவனுக்கிடும் கட்டளை! தன்மானம் தரும் அறிவுரை! அதோ, நாங்கள் சந்தித்த இரண்டு "வருங்காலங்கள்!" அவர்கள் தந்த உறுதிதான் இக்கட்டுரையின் தோற்றம்.

"தந்தையர் ஆழ்கடலுக்குச் சென்று திரும்பி வராவிட்டால், கவலையில்லை! அவர்கள் மேற்கொண்ட பணியை நாங்கள் மேற்கொண்டு ஊரையும் உறவையும் காத்திடுவோம்! அந்த நம்பிக்கைமிக்க இதயம் என்றும் உண்டு எமக்கு. அதற்காகத்தான் இன்றே பயிற்சி பெறுகிறோம். இதோ, வலைபின்னும் நூலை முறுக்கேற்றித் திரிக்கிறோம், சிரித்துப் பேசிக்கொண்டே! கட்டுமரம் தள்ளிக் கடலுக்குள் செல்லவும் தெரியும் எங்கட்கு! எல்லாவற்றையும் பழகி வருகிறோம்! எதற்கும் அஞ்சுவதில்லை! எதிர்காலம் எங்களது!" என்றனர். என்ன துணிச்சல்! ஆமாம், இதுதான் போர் மறவர்க்கும் இளமையிலேயே வளரவேண்டிய துணிச்சல்!

விடுதலை முழவார்க்க வேண்டும். புரட்சிக்கொடி உயர்த்தப்பட வேண்டும் என்பதுதானே பாடுபடும் மறவர் தம் வேட்கை மூத்த சந்ததியினர்க்கு மட்டும் அந்தக் கடன் இல்லை. இன்று அன்னார் தொடங்கும் போராட்டம் இன்றைக்கே முடிந்துவிடுவதா? இல்லை! இல்லை! நாளையும் தொடரும்; இன்னும் பன்னூறு உயிர்களைப் பலி கேட்கும்! நாம போனால் நம்பின்னே நிற்கிறது, அதோ, ஓர் இளமை அணி. பொங்கும் குருதியில் கிளம்பும் சுதந்தரநாதம் பன்னூறு காதத்திற்குக் கேட்கிறது. விடுதலைக்குக் கேட்கப்படும் விலை கொடியதுதான்! அந்த இளமைப் பேரணியை வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன். அந்த எழுஞாயிறுகளின் பொன்னொளி என்னில் நம்பிக்கையூட்டுகிறது. வெற்றி இன்றில்லை; கவலையில்லை! நாளை உண்டு.

விழுங்கக் காத்திருக்கும் கடலைக் கண்டு அந்த நெய்தல் நிலச்சிறுவர்கள் அஞ்சுவதில்லை. நாளைய வாழ்க்கைக்குச் சிரித்துக்கொண்டே தயாராகின்றனர்...

மீனவர் மக்கள் - நாளைய வாழ்வு தமதே என்கின்றனர். வாழ்க்கைப் போரை எதிர்பார்க்கின்றனர் இன்றே!

பொங்கும் புகழ்பாடும் இளையோர் அணி கிளர்ந்தெழுகிறது; மார் தட்டுகிறது; ஆமாம்! அது பேசும் தித்திக்கும் சேதி-போர் முழக்கம் இதுதான்: "நாளையப் போரின் தளபதிகள், நாமேயல்லால் வேறெவரோ?"

விடுதலைப்போரின் இன்றைய விளையாட்டில் நாங்கள் இறந்துபோகலாம். ஆனால் நாளையப் போர் நின்றுவிடாது!

ஆம்! ஆம்! நீர்தாம், நாளையப் போரின் நாயகர்கள் - நாட்டைக் காக்கும் நல்லவர்கள்! உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்!

மா. பாண்டியன்

மாயூரத்தில் மறவர் படை!



கடந்த 11, 12-ம் தேதிகளில் மாயூரத்தில் நமது பொதுக்குழுக் கூடிக் கழக வளர்ச்சிக்கான நல்ல பல முடிவுகளை நிறைவேற்றியுள்ளது. சட்டதிட்டத்திருத்தம் நிறைவேறிய சரித்திரப்புகழ். நிறை இப்பொதுக் குழுவின் சில காட்சிகளே இவை.

1. துணைப் பொதுச்செயலாளர் அருகிருக்க, பொதுசசெயலாளர் எதிர்காலத்தை விளக்குகிறார்.

2. மாவட்டக் கழகச் செயலாளர் களுடன் பொதுச்செயலாளரும் துணைப பொதுச்செயலாளரும்.



3. அண்ணா கழக நிலையை விளக்க, சம்பத், தருமலிங்கம் ஆகியோர் கவனிக்கின்றனர்.

4. உறுப்பினர்கள் எடுத்துரைக்கும் கருத்துக்களைக் கேட்கின்றனர், அண்ணா, சம்பத், இலட்சிய நடிகர், ஆசிரியர் கண்ணதாசன் ஆகியோர்.

5. மாயூரம் தோழர்கள் சென்னை மாநகராட்சித் தலைவர்க்கும் துணைத் தலைவர்க்கும் எஸ். எஸ். ஆர். தலைமையில் அளித்த வரவேற்பு ஊர்வலம்.



புகைப்படங்கள் :

இலட்சுமி ஸ்டுடியோ,

மாயூரம்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 25—7—'59 | இதழ் 6

தவறை மறைக்கத் தகாதன பேசாதீர்!

பதவி பறி போன ஏக்கத்தில், பழி தூற்றத் தொடங்கியிருக்கின்றனர் பலர். அன்னாரின் பாரத வீதியிலே பகற் கொள்ளைகள் பலவும், பழிச் செயல்கள் எண்ணிலவும் அன்றாடம் நடந்தன. அவற்றைப் பொறுக்கமுடியாத மக்கள் வழங்கிய நல்ல தீர்ப்புகளுள் ஒன்றுதான், சென்னை மாநகராட்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களிடம் தந்திருப்பது.

தூய உள்ளமும் தொண்டு மனப்பான்மையும் கொண்டுள்ள நம் தோழர்கள், முன் அங்கு மண்டிக் கிடந்த இருட்டையும் இழிவையும் துடைத்துள்ளனர். மாநகராட்சியை உண்மையிலேயே மக்களாட்சியாக்கியிருக்கின்றனர். எந்தச் செயலையும் நேர்மையோடும் நீதியோடும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுவதால் ஊழல் புரியினரின் பிழைப்பு அழிகிறது. தமது கள்ள வழி, கழகத்தவரின் தொண்டுகளால் அடைக்கப்படுவதைக் கண்டு கொதிக்கும் காங்கிரசார் அடிக்கடி பல புரளிகளைக் கிளப்புகின்றனர் அவற்றுள் ஒன்று. சென்னை மாநகராட்சியின் பள்ளிகளின் நான்காம் வகுப்புப் பாட நூல்களைப் பற்றியது. அது வளர்ந்த வழியையும் குற்றம் புரிந்தோர் எவர் என்பதையும் காண்போம்.

மாநகராட்சியின் பள்ளிகளுக்கான பாடநூல்களை ஆண்டுதோறும் நிர்ணயிக்க, நூல்களின் பட்டியல் ஒன்றைக் **கல்வித்துறை**, மாநகராட்சி உறுப்பினர்கள் அடங்கிய **கல்வி நிரந்தரக்குழு**விற்குத் தரும், ஆணையாளர்மூலம். கல்வித்துறையினர் தரும் பட்டியலில் உள்ள நூல்களுள்ளேயே வேண்டியவற்றைத் தேர்ந்தெடுக்கும் அக்குழு. அந்நூல்கள் ஏற்கனவே மாநில அரசின் பொறுப்பிலுள்ள பாடப்புத்தகக் குழுவால் (Text-Book Committee) அங்கீரிக்கப்பட்டும், அவ்வங்கீகாரம் சென்னை அரசினரின் "கெஜட்"டில் வெளியிடப்பட்டுமிருக்கவேண்டும். பின்னர் ஆணையாளரும் கல்வித்துறையினரும் உரிய முறையில் பாட நூல்களை அறிவிப்பர். வழக்கங்களை விளக்க இவ்வளவு போதும் இனி நடந்ததைக் காண்போம்.

ஆனால் இவ்வாண்டுத் தொடக்கத்தில் காங்கிரசார் விதிமுறைகளை மீறியிருக்கின்றனர். "அடுத்து வேறு நகராட்சி வருகிறது புதிதாக யார் யார் வரப் போகின்றனரோ? அதிகாரம் எங்கு மாறுமோ? அதற்குள் நம்மாலானதை நாம் பெற்றுக்கொள்வோம்!" என்று நினைத்தனரோ, யாதோ?—**அவசர அவசரமாக**, கடந்த தடவை மாநகராட்சியிலிருந்த காங்கிரசு உறுப்பினர்கள் உள்ளதான கல்வி நிரந்தரக்குழு கூடியது! எதற்கு? தமது பதவி காலத்திற்குப்பின் உள்ள 1959-60-ம் ஆண்டிற்கான பாட நூல்களை நிர்ணயிப்பதற்காகக் கூடியது! என்று? தமது பதவிக்காலத்தில் கடைசி நாளின் இரவு! அப்படிக் கூடி நூல்களை நிர்ணயிக்கும்படி, மாநகராட்சியின் ஆணையாளரோ, கல்விக்குழுவோ கேட்டுக்கொண்டதா? கிடையவே கிடையாது! அப்படியானால் அவ்வளவு விரைவாய் நள்ளிரவில் கூடி நிர்ணயிக்க வேண்டியது ஏன்?...ஏன்? புத்தக வியாபார நோக்கமாயிருக்கலாம் எனப் பொதுமக்கள் எண்ணுவதை அறிகிறேன். அந்த ஐயத்தை அகற்ற வேண்டியது, தம்மிடையே சில ஞானத்தையும் வேறு பல ஆசைநாயகியரையும் வைத்துக்கொண்டிருந்த காங்கிரசார் பொறுப்பு. சரி. ஆணையாளர் கோராமலே, கல்வித்துறையினர் பட்டியல் தராமலே, இவர்களாகக் கூடிப் பொறுக்கிய நூல்கள் எப்படிப்பட்டவை? நல்லவையா? சட்டப்படி உள்ளவையா? கிடையவே கிடையாது! இந்தக் கல்வி ஆண்டுக்குக் கடந்த கல்வி ஆண்டே கூடிக் காங்கிரசு நிரந்தரக்குழுவினர் நிர்ணயிக்க நூல்கள் எதுவுமே, மாநில அரசினர் நடத்தும் Text-Book Committee யின் அங்கீகாரம் பெற்றதல்ல; அவ்வாறு எந்த நூலும் "கெஜட்டி"ல் அதுநாள் வரை தெரிவிக்கப்படவில்லை. "அந்நூல்கள் அங்கீகாரம் பெற்றுள்ளது எமக்குத் தெரியும். அதனால்தான்.." என்றிடலாம் காங்கிரசார். அப்படியானால் மாநில அரசினரின் இரகசியம் எப்படி வெளியானது? அதற்கு யார் பொறுப்பாளி? அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்பட வேண்டும் சட்டப்படி? எல்லாம் கற்றுத் துறை போகிய காமராசருக்கே அது வெளிச்சம்!

நிற்க, தமது வாழ்நாளின் இறுதிக்கட்டத்தில் காங்கிரசார் கூடி எடுத்த முடிவு சரியானதானால்-சட்டத்திற்குட்பட்டதானால், மாநகராட்சியின் ஆணையாளர் ஏன் தமது சட்ட ஆலோசகரின் துணையை நாடினார்? ஒன்று உறுதியாய்த் தெரிகிறது இதிலிருந்து-ஆணையாளருக்கே, காங்கிரசார் செய்த முடிவு தவறாகப்பட்டிருக்கிறது. தானே சொன்னால் காங்கிரசாரின் பகையேற்படும் என்றோ-என்னவோ, சட்ட ஆலோசகரை நாடியிருக்கிறார், ஆணையாளர். சட்ட ஆலோசகர் சென்னை மாவட்டக் காங்கிரசின் தலைமையரான திரு. செங்கல்வராயன் அவர்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இனி, தி. மு. கழகம் ஆட்சியை ஏற்றபின் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பார்ப்போம். எங்கெங்கு ஊழல் இருந்தாலும் கண்டிப்பதும் களைவதும் தான் தி. மு க. பணி. அந்த நேர்மையான வழியில் செல்லும் நமது நிரந்தரக் குழுவிடம், ஆணையாளர் அவர்கள் ஜூன் தொடக்கத்தில் அளித்த பட்டியலின்படி நமது குழுவினர் கூடி நான்காம் வகுப்புக்கான நூல்களை நிர்ணயித்திருக்கின்றனர். 15-6-59 அன்று கூடி நிரந்தரக்குழுவினர் நிர்ணயித்த நூல்கள் அனைத்தும் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டவை; அரசினர் "கெஜட்"டில் அவ்வங்கீகாரங்களும் வெளிவந்திருக்கின்றன. நிர்ணயத்தில் எந்த வகை அழுக்கோ, கறையோ இல்லை! '59-'60-ம் கல்வி ஆண்டிற்கான நூல்களை 55-ம் ஆண்டு தொடங்கி '59 ம் ஆண்டுவரை மட்டுமே பதவியிலிருந்த காங்கிரசார் நிர்ணயித்ததுபோல் எந்தத் தவறையும் தி. மு. கழகத்தவர் செய்யவில்லை!

ஆக, இப்போதுள்ள சிக்கல் எல்லாம் யார் நிர்ணயித்த நூல்களை வைத்துக்கொள்வது என்பதுதான்.

கழகத்தவர் செய்த முடிவுகள் தாம் முறையானவை-சட்டத்திற்குட்பட்டவை என்பதை ஆணையாளர் அவர்கள் நன்குணர்ந்திருந்தும், ஏனோ சட்டம் என்று வீண் குழப்பத்திற்காளாகியிருக்கிறார்! அதனால்தான் நூற்பட்டியலை அறிவிப்பதில் தாமதமேற்பட்டுள்ளது. நிலைமைக்கு—இந்த நெருக்கடிக்கு யார் பொறுப்பு என்பதைப் பொதுமக்களே உணர்ந்திருப்பர், இவ்வளவையும் படித்து.

இதற்குமுன்பே இவ்வளவும் தெரிந்திருந்தும் காங்கிரசார் சிலர் தப்புப் பேச்சில் இறங்கியிருக்கின்றனர். திருமங்கலம் தீவட்டி என்று அருமைப் பெயர் தாங்கிய பட்டைச் சாராய வீரர் ஆடும் ஆட்டம் சொல்லமுடியாது. இவர்கள் ஆட்சியிலுள்ள மாநிலத்தின் மற்ற இடங்களில் எல்லாம் ஒழுங்காகப் புத்தகங்களைத் தந்துவிட்டதைப்போல் தீவட்டியார் பேசத் தொடங்கியிருப்பதுதான் வேடிக்கை. மாநிலமெங்கும் ஊழல் சிரிக்கிறது; ஏமாற்றம் தாண்டவமாடுகிறது; புத்தக நிர்ணயத்தில் காங்கிரசார் ஊருக்கு ஊர் குடுமியைப் பிடித்துக்கொள்கின்றனர்.

திருச்சி, தென்ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற பல மாவட்டங்களில் தொடக்கப் பள்ளிகளுக்கான நூல்கள் அறவே கிடைக்கவில்லை. அவற்றால் அவதியுறும் மாணவர்கள் எண்ணிக்கை வெறும் பத்தாயிரமல்ல; இருபதாயிரமல்ல; பல நூறாயிரம்! கிடைகின்ற நூல்களும் ஒழுங்காயிருப்பதில்லை. அண்மையில் அரசினர் வெளியிட்ட எஸ். எஸ். எல். சி. தமிழ்ச்சுவடியை வாங்கிய நமது நண்பரொருவர் சில பக்கங்களையே காணோம் என்று காட்டினார். அந்நூல் அரசினரின் அருள் பார்வையால் வெளியானது! தீவட்டியார்க்கோ, அவரது திருவடியார்க்கோ அவை தெரியாதா? தெரியும்! தெரிந்துதான் அவற்றை மறைக்க இப்பாடு படுகின்றனர்?

இவற்றைவிட பயங்கரமான மற்றொரு நிலைபற்றி நமக்கு வந்துள்ள நண்பரின் தகவல் ஒன்றின் கருத்தைக் கீழே தருகிறோம்.

இ. எஸ். எல். சி. என்பதற்கான பாட நூல்கள் சென்னை அரசின் கல்வித் துறையால் வெளியிடப் பெறுகின்றன. அந்நூல் இவ்வாண்டு ('59-'60க்குரியது) வெளியானதே, காலங்கடந்ததுதான். ஆனாலும் அது பல பகுதி மாணவர்க்குக் கிடைக்கவில்லை எடுத்துக் காட்டுக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வெற்றியூர்ப் பள்ளியில் நடப்பதைக் காண்க. அப்பள்ளியில் இவ்வாண்டு முப்பது மாணவர் இ. எஸ். எல். சிக்குப் படிக்கின்றனர். அவர்கள் பள்ளி ஜூனிலேயே திறக்கப்பட்டும் இன்றுவரை அவர்களில் ஒருவருக்குக்கூட ஆங்கிலச் சுவடி கிடைக்கவில்லை. அவ்வாங்கிலச் சுவடியை வெளியிட்டோரும் சென்னை அரசினரே. வெற்றியூர்ப் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் அலையாய் அலைந்தனர், காரைக்குடி, மதுரை, திருச்சி என. ஆனாலும் ஒரு பிரதிகூடக் கிடைக்கவில்லை. அந்த முப்பது பிள்ளைகளின் கல்வி என்னாவது? எல்லோரும் காமராசர்களாக வேண்டுமென்பது, கல்வி அமைச்சரின் ஆவலா? அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் பக்கத்து ஊர் ஒன்றிற்குச் சென்று அங்குள்ள பள்ளியாளரிடம் நிலையை விளக்கி ஒரே ஒரு புத்தகம் இரவல் பெற்று வந்து இப்போது பாடம் நடத்துகின்றார்.

இது போக ஆசிரியரில்லாமல் பல பள்ளிகளில் மாணவர்கள் படும் தொல்லை வேறு. ஆண்டு தோறும் பலர் ஆசிரியப் பயிற்சி பெற்று வெளிவந்தும், அவர்கட்கு வேலையில்லை என்ற ஏமாற்றம். ஆனால் அதே நேரத்தில் பல பள்ளிகளில் ஆசிரியரில்லை என்ற திண்டாட்டம்!

இப்படியுள்ள பல தொல்லைகளை மறைப்பதற்கே-மக்கள் கண்களிலிருந்து அகற்றுவதற்கே, தன் பாழ்த்த வாயைத் திறந்துகொண்டு கிளம்பியிருக்கிறார், திருமங்கலம் தீவட்டியார்! அதைத் தூக்கிக் காட்டிச் சில ஏடுகளும் தாளம் போடுகின்றன! கைக்கூலி பெறுவோர் பற்றியும் கால்வருடிப் பிழைப்போர் குறித்தும் நமக்குக் கவலையில்லை. ஏனென்றால் மாநகராட்சிக் கல்வி நிரந்தரக் குழுத்தலைவர் ஆ. கா. அ. அப்துஸ் சமத் எம். ஏ. அவர்கள் விடுத்த அறிக்கை அவர்கள் வாயையடைத்திருக்கும் என்றே நம்புகிறோம்! பொது மக்களும் உணர்ந்துவிட்டனர் இதை: "தி. மு. கழகத்தினர் உள்ள இவ்வாண்டையக் கல்வி நிரந்தரக் குழுவின்மேல் குற்றம் ஏதும் கிடையாது. தமக்கு வேண்டாத ஆண்டுக்குப் பாடநூல் நிர்ணயித்த காங்கிரசாரின் செயலே தவறானது. அதற்குச் சட்ட அரண் கட்டித் திண்டாடும் ஆணையாளர் போக்கே துன்பத்திற்கடிப்படை! **தி. மு. கழகத்தார் நேர்மையோடு செய்யும் எந்தச் செயலையும் எதிர்க்கவேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் காங்கிரசாரால்தான் இத்தொல்லைகள் வளர்ந்தன.** இதுவே உண்மை! உறுதி! ஊரை ஏய்க்கும் காங்கிரசார்க்கு விரைவில் வருகிறது, வாணாளின் இறுதி!

★

கிரேக்க நாகரிகம்

இன்றைய நாகரிகம் எதிர்காலச் சந்ததியினர் போற்றிப் புகழ்கின்ற ஒரு தலை சிறந்த நாகரிகம் என்று உலகில் உள்ள எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் நாகரிகத்தின் முதிர்ச்சி என்று சொல்லப்படுகின்ற இந்த 20-ம் நூற்றாண்டின் நாகரிகம் அழிந்து விடாமல் இதே நிலையில் இருக்குமா என்பது ஆராய்ச்சிக்குரிய ஒன்று. ஏனென்றால் இன்றைய நாகரிகத்திற்கு முன்பு-அதாவது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தலைசிறந்த நாகரிக வளர்ச்சியை உலகினிலே முதன் முதலாகக் கொண்டுள்ளது கிரேக்கம் என்பது வரலாற்றாசிரியர்களின் முடிவு. கிரேக்க நாகரிகத்தை வானளாவப் புகழும் வரலாற்றாசிரியர்கள் 'சுதந்திரம்' என்கின்ற வார்த்தைக்கு, கிரேக்கம் அளிக்கும் மதிப்பை வைத்துத்தான் அந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள் என்பது புலனாகின்றது.

கிரேக்க நாடும் ஒரு ஆபத்தான சூழ்நிலையில்தான் அமைந்திருந்தது. கிரேக்க மக்கள் நாகரிகமான வாழ்க்கையை நடத்தினார்கள். அவர்களைச் சுற்றி நாகரிகமில்லாத காட்டுமிராண்டிகள் சூழ்ந்திருந்தார்கள். கிரேக்கத்தின் சுதந்தரத்திற்கு, பாரசீகம் ஒரு எதிரியாக இருந்தது. கிரேக்கத்தை அடிமைப்படுத்திவிட வேண்டும் என்று பாரசீகம் துடியாகத் துடித்துக்கொண்டிருந்தது. ஆனாலும் பாரசீகத்தின் முயற்சி தோல்வியில் தான் போய் முடிந்தது. பலம் பொருந்திய பாரசீகத்தை, சிறிய நாடான கிரேக்கம் எவ்வாறு தோற்கடிக்க முடிந்தது என்று ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் கிரேக்க வீரன் ஒவ்வொருவனும் சுதந்தரத்தைத் தன் தாயைவிட மேலாக நேசித்தான். விடுதலை வாழ்வில் கிரேக்கர்கள் கொண்டிருந்த மோகத்தைக் கண்டு மண்ணே வியந்தது. அன்றைய உலகத்திலே சுதந்தரம் என்ற வார்த்தையே கிரேக்கத்திலேதான் பிறந்தது. எகிப்து, பாபிலோன், அசிரியா, பாரசீகம் போன்ற பல பேரரசுகள் செழிப்புற்றிருந்தன. அந்தப் பேரரசுகளிலே இருந்த மக்கள் செல்வ போகத்திலே புரண்டெழுந்தனர். உல்லாச வாழ்க்கையும், விளையாட்டுக்களும் அவர்களுக்கு எளிதிலே கிடைத்தன. ஆனால் சுதந்தரம் என்பதை அவர்கள் தெரியார்கள். அடிமை வாழ்விலே ஆனந்த வாழ்க்கையை ரசித்தவர்கள். கிரேக்கர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் கொண்ட பெர்சியர் 'மராத்தான்' 'கலாமிஸ்' ஆகிய இரு இடங்களிலே கிரேக்கர்களோடு போர் தொடுத்தனர். பெர்சியர் படை எண்ணிக்கையில் பெரியது. ஆனால் பெர்சிய அரசனை ஒரு சர்வாதிகாரியின் கீழ் இருந்தது. எண்ணிக்கையில் சிறியதான கிரேக்கப் படை சுதந்திர வெறிகொண்ட விடுதலை வேட்கை நிரம்பிய வீரர்களைக் கொண்டுள்ள கிரேக்கப்படை, பெர்சியரைத் துரத்தியடித்துத் தனது பெருமையை நிலைநாட்டியது.

மக்களாட்சி அமைப்பு முறையை உலகிலேயே முதன் முதலாகக் கொண்டது கிரேக்கநாட்டில் உள்ள ஏதன்ஸ் நகரர் தான். இன்றையதினம் இருக்கின்ற மக்கள் சபைபோல் ஏதன்சில் "அசெம்பிளி" என்று ஒன்று இருந்தது. இந்த மன்றத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் அங்கத்தினர்களாவார்கள். '500 பேர்கள் மன்றம்' (Council of 500) என்று மற்றொரு மன்றம் உண்டு இந்த மன்றம் அசெம்பிளி இடுகின்ற கட்டளையை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அரசாங்க அதிகாரிகள், நீதிபதிகள் முதலியோரை அசெம்பிளி தேர்ந்தெடுத்து அனுப்பும் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் அசெம்பிளியில் அங்கத்தினர்களாவதன்மூலம், ஏதன்ஸ் நகரில் உள்ள அத்தனை வயது வந்தவர்களுக்கும் அரசாங்க அதிகாரிகள் நீதிபதிகள் முதலியவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது. எனவே ஆட்சி முறையில் ஒவ்வொருவனுக்கும் அக்கறை இருக்கவேண்டும் என்கின்ற ஆர்வம் ஏதன்ஸ் நகர மக்களுக்கு இருந்தது என்பதை அறிகிறோம். அரசியலில் அவர்களுக்கிருந்த ஆர்வம் மற்ற எல்லாத் துறைகளிலும் இருந்தது. எதையும் பகுத்தறிவால் ஆராய்ந்து பார்க்கவேண்டும்; எப்பொருளைப் பற்றியும் சிந்திக்கவேண்டும் என்று ஒவ்வொரு பள்ளிக்குழந்தைக்கும் கற்றுத் தரப்பட்டது. சிந்தனை அவர்களின் தலையாய கடமையானது. கிரேக்கர்களின் சிந்தனைக்கு வித்திட்டவன் சாக்ரட்டீஸ்தான். சாக்ரட்டீஸ் விட்டுச்சென்ற பணி பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களால் தொடரப்பட்டன. பழம் நாளில்சூரியன் பூமியைச் சுற்றுகிறது என்று தவறாக எண்ணி வந்தார்கள். சூரியன் பூமியைச் சுற்றவில்லை; பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்பதை கிரேக்கப் பேரரசு தோன்றி 1600 ஆண்டுகளுக்குப் பின் காப்பர்னிகஸ் என்பவன் எடுத்தியம்பினான். ஆனால் கிரேக்கம் செழிப்புற்ற காலத்திலே அரிஸ்டார்க்கஸ் என்ற கிரேக்கச் சிந்தனையாளன் இந்த உண்மையை எடுத்துரைத்திருக்கிறான். "அரிஸ்டாட்டிலினுடைய சிந்தனைக் கருத்துக்களுக்கு முன்பாக அறிவியல் உலகத்தில் உள்ள நாமெல்லாம் பள்ளிப்பிள்ளைகளாகக் காட்சியளிக்கிறோம்" என்று டார்வின் ஒருமுறை கூறினார். அரசியலோ,சமுதாயமோ,பொருளியலோ, அறிவியலோ - எந்தத் துறையையெடுத்தாலும் அந்தத் துறையில் தங்கள் கருத்துக்களைக் கிரேக்கச் சிந்தனையாளர்கள் பதித்துவைத்திருக்கிறார்கள். "இன்று இருப்பதுபோல், மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதற்கு அரசியல் கட்சிகளோ, தொழிற் சங்கங்களோ அன்று கிடையா. அப்படியிருந்தும் அத்தனை அறிவு பெற்றவர்களாக கிரேக்கர்கள் திகழ்ந்தது ஏன்? அவர்களது சிந்தனைத் திறத்தால்தான் என்று ஈடித் ஹாமில்டன் என்ற ஆசிரியை கூறுகிறார். தன் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கிரேக்க நாகரிக ஆராய்ச்சியில் கழித்த ஈடித் கிரேக்கர்களது சிந்திக்கும் ஆற்றல்தான் அவர்கள் வெற்றிக்குக் காரணம் என இயம்புகிறார். "அவர்கள் வளர்ச்சியடைந்ததற்குக் காரணம் அவர்களது சுதந்திர வாழ்க்கை அவர்களது நாடு சுதந்திர நாடு. ஏனென்றால் அவர்கள் சுதந்திர வீரர்களாக காட்சி அளிக்கிறார்கள்" என்று ஒரு அரசியல் மேதை கிரேக்கத்தை பற்றி எழுதும்பொழுது குறிப்பிட்டான்.

சட்டத்திற்கு என்றுமே கட்டுப்பட்டவர்கள் கிரேக்கர்கள். சட்டத்திற்கு மதிப்பளிப்பவர்கள். சட்டத்திற்குட்பட்ட அரசியல் அமைப்பையே விரும்புபவர்கள். தம் சொந்த நலனை விடப் பொதுநலனில் அதிக அக்கறை கொண்டவர்கள். பொதுமக்கள் நல்வாழ்வில் அவர்கள் அக்கறை கொண்டுள்ள காரணத்தால்தான் அவர்கள் தங்கள் தாய்நாட்டை உயிரைவிட மேலானதாக நேசிக்க வழிபிறந்தது. கிரேக்கனுடைய நாட்டுப்பற்றை புவனமே அறியும். தன்னாடு பொன்னாடு; அந்நாட்டிற்குத் தீங்கு எனில் அடங்குமோ ஆத்திரம்தான் எனத் துள்ளி எழும் மறவர் படைத்திறம் பெற்றவர்கள் கிரேக்கப் பெருமக்கள். அவர்களது கடமையுணர்ச்சியும் நாட்டுப்பற்றும் தான் சகல துறைகளிலும் அவர்கள் வல்லுநர்களாகத் திகழ வழி வகுத்தது. கிரேக்கம் அரசியல் ஞானிகள் தவிர கணித வல்லுநர்கள் — விஞ்ஞான வித்தகர்கள் பலரையும் காணிக்கையாக அளித்திருக்கிறது. சைரக்யூஸ் நகரத்தில் பிறந்த ஆர்க்கிமீடஸ் (287-212 B. C.) மனித சாஸ்திரத்தில் உலகம் வியக்கும் சில உண்மைகளை எடுத்துரைத்திருக்கின்றார். டெல்ப்பியில் உள்ள அப்பெல்லோ ஆலயத்தின் முன் வாசலில் 'மனிதனே உன்னையே நீ அறிவாய்' (Man know thyself) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஒரு சான்றே கிரேக்க மக்களின் அறிவு வேட்கையை உலகெங்கும் பறையறைகின்றது.

கட்டிடக் கலையில் கிரேக்கர்களின் கீர்த்தியை எடுத்துச் சொல்ல பிடியாஸ் என்ற சிற்பியின் அழகு சிலைகள் இன்றும் காணப்படுகின்றன. செர்க்கஸ் என்ற பெர்சிய மன்னனின் கீழ், கிரேக்கர்களை ஒழித்துவிட வேண்டுமென்று திட்டம் தீட்டிய பெர்சியர்கள் போர்க் களத்திலே ஏற்பட்ட தோல்வியிலே உள்ள வயிற்றெரிச்சலால் ஏதன்ஸ் நகரில் உள்ள அழகு மிகுந்த ஆலயங்களையெல்லாம் தீக்கிரையாக்கினர். மறைந்து போன மண்டபங்களை மீண்டும் எழுப்ப வேண்டும் என்று விரும்பிய பெரிக்கில்ஸ் என்ற அரசன் பிடியாஸ் என்ற அந்தத் தலைசிறந்த சிற்பியிடம் அற்புதமான வேலைப்பாடமைந்த சிற்பங்களையும் ஆலயங்களையும் கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டான். மன்னனின் ஆணையைத் தலைமேற்கொண்ட சிற்பி இரவும் பகலும் பாடுபட்டு வேலைப்பாடமைந்த பல கோயில்களையும் சிற்பங்களையும் செதுக்கினான். ஒலிம்பியாவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஸ்யூஸ் சிலைகளும் ஏதன்ஸில் உள்ள 'வெற்றிக் கோயிலும்' பிடியாசின் படைப்புக்களே. கிரேக்கக் கட்டிடக் கலை இந்தியாவிலும் பரவியது. அந்தச் சமயத்தில் வடநாட்டை ஆண்டு வந்த கனிஷ்க மன்னன் காந்தாராச் சிற்பங்கள் கிரேக்கப் பாணியில்தான் செதுக்கப்பட்டன.

இலக்கிய உலகத்தில் கி. மு. 8-ம் நூற்றாண்டிலே கிரேக்கர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்திவிட்டனர். மாகவி ஹோமர் தனது இரு பெரும் இலக்கியங்களான இலியட், ஒடிசி ஆகியவற்றை உலகுக்கு அளித்தான். நாடகம் மூலம் நாட்டிற்கு பல நல்ல கருத்துக்களை அளித்தனர் கிரேக்க நாடக ஆசிரியர்கள். "கலை கலைக்காக அல்ல. அது மக்களுக்காக" என்ற தத்துவத்தை நன்குணர்ந்தவர்கள் கிரேக்கர்கள். கலையில் பிரச்சாரமா என்று கூக்குரலிடும் இருபதாம் நூற்றாண்டு "பெரிய மனிதர்"களைக் கண்டு கி. மு. 5-ம் நூற்றாண்டு கிரேக்கன் விலாவொடியச் சிரிப்பான். பெரிக்கில்ஸ் என்ற மன்னன் ஏதன்ஸை ஆண்ட காலத்து நாடகம் செழிப்புற்று விளங்கியது. அச்சிலஸ், சாப்ஹாக்கில்ஸ், யூரிப்பைடஸ் போன்ற நாடகாசிரியர்கள் தங்கள் நாடகங்களின் மூலம் நல்ல பல கருத்துக்களை நாட்டு மக்களுக்கு அளித்தனர். ஹெரடோட்டஸ், தூசிடைடஸ் என்ற இரு பெரும் சரித்திர ஆசிரியர்கள் அப்பொழுது கிரேக்கத்தில்தோன்றியவர்கள்தான். இன்றைய நாகரிகம் பழம் பெரும் கிரேக்க நாகரிகத்தின் அடிப்படையில்தான் எழுப்பப்பட்டது என்பது வரலாற்றாசிரியர்கள் முடிவும் சரித்திர மாணவர்களின் ஆராய்ச்சியுமாகும்.

—பெஸ்கி எம். ஏ.

"இலக்கியப் பண்பு"

உள்ளத்தில் உயர்வும், எண்ணத்தில் ஏற்றமும் இணையப்பெற்றோர் புனைவனவற்றுள் புதுமைகள் காணப்பெறும். ஆழ்ந்த எண்ணத்தின் அடியில் முகிழ்க்கும் கருத்துக்கள் தேர்ந்தவைகளாகவே தெரியும். அவைகளிற் பல அன்றாட வாழ்க்கையில் அடிபட்டவைகளாகவும் - சில கூறுபவரின் இலட்சிய வாழ்வியலாகவும் இருக்கும். ஆனால் அவையனைத்தும் கற்போரின் நற்பேறுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகளே ஆகும்.

நல்ல பண்பாடுகள் நடமாடிய நாட்களில் இளங்கோ அடிகள் வாழ்ந்தார் என்பதை அவர்தம் கூற்றுக்கள் தெளிவுபடுத்தும். அடுத்துக் கெடுக்கும் அன்பற்றாரோ-கடுத்தது கூறும் கொடுமைக்காரரோ-குரல் எழுப்பாத காலம் அது. 'நாகரிகம்' என்று வாய்கிழிய வரட்டுக்கூச்சல் எழுப்பும் இன்றைய வாய்ச்சொல் வீரர்கட்குச் செயல் முறையைச் செப்புகிறார் இளங்கோ, தம் சிலம்புள்.

விடிந்தவுடன் விழிதிறந்து கண்டால் உளம் நோகும் அளவற்ற செய்தித்தாள்கள்! "இலக்கியம் கண்டவன்; இலக்கிய வாழ்வு வாழ்ந்தவன்!" என்று ஐம்பெருங் காப்பியங்களை - புறநானூற்றை - தொல்காப்பியத்தைக் காட்டுவதால் நம்மிடம் பண்பாடு வரப்போவதில்லை! சில சொற்களைக் கூறுவதே 'நாகரிகம்' அல்ல என்று எண்ணிச் செம்மையுற வாழ்ந்த தமிழ்இனம் - இன்று அவை தம்மையே பெரிய எழுத்து வடிவில் வடித்துப் பொருள் தேடுவது பெரும் இழுக்கு ஆகும். வெறும் பேச்சால் பெருஞ் செயல்களைச் செய்யமுடியாது என்பது உண்மை. எழுத்துக்கள் மட்டும் மாற்றமுடியுமா? என்றால் இல்லை. ஆனால் நம்மை நாம் ஒருமுறை திரும்பிப்பார்த்தால் விரும்பிய வாழ்வு திருப்பலாம் என்ற எண்ணம் இன்று சிலம்பைத் தொடச் செய்தது.

களவு கண்டு, கற்பு மணம் கொண்டு, புறவாழ்வில் புகழ் மொண்டு, தன் வாழ்வை நடாத்தியவன் தமிழ்மகன். மணம் செய்து தலைவியுடன் இன்பம் துய்த்தல் மரபு-அனைவரும் அறிந்த ஒன்றாகும்; இளங்கோவும் அறிந்ததாகும். கோவலனுக்கும் - கண்ணகி நல்லாளுக்கும் மணம் நடந்தது. மாலைகள் அணிந்திருந்தனர்; அம்மலர் மாலைகள் தங்கள் இயல்பு மாறிக் கசங்கி இருந்தன. கோவலன் பொருளற்ற கட்டுரை புகலத் தொடங்கினான்"- இவைதாம் கவிதையில் உள்ளவை.

"கழுநீர்ப் பிணையல்
முழுநெறி பிறழத்
தாரும் மாலையும்
மயங்கிக் கையற்று..."

மணமக்கள் இருவர் நெஞ்சில் உள்ள மலர்மாலைகள் வாடின என்றால் என்ன பொருள்? இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிப் புணர்ந்தமையால் பெற்ற இன்பத்தையல்லவா கவிஞர் கவினுற-மறைபொருளாக, மலர்நெறி பிறழ்ந்தது என்று காட்டுகிறார். 'புணர்ந்தனர்' என்று சொல்லுதல்கூடப் பண்பாடல்ல என்று "தாரும் மாலையும் மயங்கின" என்று கூறுவதால் இளங்கோ அடிகளின் மனப்பக்குவத்தை - பாட்டின் உயர்வைக் காண முடிகிறது.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்டான் - வெற்றிச்செல்வியைப்பற்றி வர சில திங்கள் சிதறின- சேரமாதேவி பிரிவுத்துயரால் நொந்திருத்தல் இயல்பு. வெற்றியுடன் மீண்ட மன்னனை வீரர் வாழ்த்துக் கூற-விழாக் கண்டனர் மக்கள். இரவு நெடுநேரம் விழா நீண்டது போலும் எஞ்சிய பகுதியைக் கூறாமல் விடிந்ததையும் விளக்காமல் அரசவைக்குச் சென்றான் சேரன் என்றார் அடிகள்.

"கூத்தச் சாக்கையன்
ஆடலின் மகிழ்ந்தவன்
ஏத்தி நீங்க
இருநிலம் ஆள்வேன்
வேத்தியன் மண்டபம்
மேவிய பின்னர்."

இரவில் சாக்கையன் கூத்தைக் கண்டு மகிழ்ந்து அவனைப் பாராட்டியதற்கும், காலையில் வேத்தியல் மண்டபம் நுழைந்ததற்கும் இடையில் நடைபெற்ற ஒரு செய்தி 'நாகரிகம்' காரணமாக நழுவியுள்ளது. அது என்ன? சேரனின் அகவாழ்வே அது. தேவியும் மன்னனும் இன்பம் கண்ட செய்தி இடையில் இல்லை! ஏன்? கூறினால் என்ன? இளங்கோ கூறுதற்குக் கூசுகிறார்! என்ன உயரிய பண்பாடு! மனவளர்ச்சி மலையைவிட உயர்வேயாகும்.

காவாநாவுடைய கனக விசயர்களை வென்று கல் சுமக்கச் செய்து தன் நாடு கொண்டுவந்தான் சேரன். தன் இனத்தைத் தாழ்த்திக் கூறியவனைத் தலைமேல் கல்லேற்றித் தன் நாடு கொண்டுவந்து, 'தமிழரை, தமிழை இகழ்ந்தோரைத் தாரணியில் தப்பவிடேன்' என்று எல்லோருக்கும் விருந்து காட்டினான். 'ஆரிய அரசர்கள் அடாத சொற்களையல்லவா வீசினார்கள்! இன்று நம்மால் அருஞ்சிறைப்படுத்தப்பட்டபின் அந்தச் சுடுசொல் நவின்ற நாவைத் துண்டித்து விடலாமே!" என்று சேரன் எண்ணியிருந்தால் செய்யவா முடியாது? சேரன்மட்டுமல்ல, அவன் இனமும் அத்தகைய கொடிய குணம் கொண்டதல்ல! தகாதன கூறிய தருக்கர்களைத் தண்டிக்காமலும் விடுவதல்ல! எங்கள் வலிமை உயர்ந்தது-உண்மையறியச் செய்ய வேண்டிய இடத்தில் மட்டும் எழுந்து விளங்குவது. அவற்றில் ஒன்றுதான் சேரனின் செய்கை. கனக விசயர்களைக் கல்லேற்றிவரக் கட்டளையிட்ட மன்னன், தன் நாடடைந்தவுடன் அந்த ஆரிய அரசர்களைச் சிறையில் அடைத்துச் 'சித்திரவதை'ப்படுத்தவில்லை. சிந்தை குளிரும் விந்தைச் செயல் செய்கின்றான் சேரன். பூம்பொழில் சூழ்ந்த புது மாளிகை இரண்டினைத் தந்து, அம்மன்னவரை அங்குத் தங்கச்செய்து வேண்டுவன தருதற்கு வேறு பலரை ஏற்பாடு செய்து, தன் உயர்பண்பை உலகிற்குக் காட்டுகிறான் சேரமன்னன்.

"ஆரிய அரசரை
அருஞ்சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சி
மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித்
தண்மலர்ப் பூம்பொழில்
வேளாவிக் கோ
மாளிகை காட்டி
நன்பெரு வேள்வி
முடித்ததற் பின்னாள்
தம்பெரு நெடுநகர்ச்
சார்வதுஞ் சொல்லியம்
மன்னவர்க் கேற்பன செய்க."

தான் செய்யும் வேள்வியைக் கண்டு பின்னர் அவர்தம் நாட்டிற்குச் செல்லலாம் என்றும் சேரன் கூறுகிறான். பெரும்படை கொண்டு நெடுந்தூரம் சென்று, போரிட்டு - வென்று-வெறியர்களைக் கைதியாகக் கொண்டுவந்தான் சேரன். தன் இனத்தை, தன் மொழியுடையோரைத் தாழ்வாகக் கூறியவரைத் தலை ஒடித்ததே தகுந்த தண்டனை என்று எண்ணினான் போலும். தகாதன கூறியோரைத் தன்நாட்டில் காட்டிய பின்னர் அப்பேடிகளைத் தன் நாட்டிலே சிறை வைத்தல் நீர்மையற்றது என்று 'திரும்பச் செல்லலாம்' என்று சேரன் விடுத்தான் போலும். என்ன உயரிய பண்பு! பிறர் இத்தகைய கொடியவர்கள் நாவைக் கொடு வாளுக்கிரையாக்காது விடுவரா? இவனோ நாவை அறுக்காததோடு அவர் தமக்கு இருக்க அரண்மனையும் தந்து, வேள்வி கண்டு பின்னர் அவர்தம் நாட்டுக்கு மீளலாம் என்றும் கூறுகிறான். இலக்கியம் விளக்கும் இப்பண்பு, இன்று 'நாகரிகம்' பேணும் நமக்குத் தெரியவேண்டாமோ? நம்மில் பலர் அறிந்த ஒன்று - ஆனால் அப்பண்பு கைவரப் பெற்றோர் காணல் அரிது!

"மறப்போம் - மன்னிப்போம்" - என்றார் அறிஞர் அண்ணா! "தகாதவை கூறியவரை மறப்போம் - மன்னிப்போம்!" என்றார் தம்பியுடையார். சேரனைச் சேர்ந்தவர் இவர். அதை மறந்து உணர்ச்சி நரம்பினை முறுக்கி விட்டிருந்தால்...? செயல்பல சோர்வான செய்திகளைச் சொல்லியிருக்குமே! அத்தகைய இழிசெயல்களைத் தடையிட்டு, தகாத கூறியவரை நோக்கி "மறந்தோம் - நின்னை மன்னித்தோம்" என்று எழுதி எழுச்சி பெற்ற பல்லாயிரவர் உள்ளக் கொதிப்பை அடக்கியவர், பண்புடையவர். அதனால்தான் இன்றும் 'அண்ணா' என்ற சொல் தமிழகத்தில் தன் இரத்த உறவை ஒதுக்கி, சிறப்புப் பொருளாக—தனி மனிதரை— தங்கக் குணமுடையாரைக் குறிக்கும் சொல்லாகியுள்ளது. காரணம்: "பண்பு" - "நாகரிகம்." பண்புடையார் மாட்டே உலகம். அவர் வழிப்படும் ஆயிரமாயிரம் தம்பியரும் அவர் 'பண்பு' காண முயலவேண்டும். அப்'பண்பு' கைவரப்பெற்றால் கதிரவன் உதயமும் - கவினும் காவலும் காணமுடியும். அப்'பண்பு' காண அனைவிரும் விழைவீராக.

-கதிரவன்

வாழ்கின்றானே!

வானொலியென் றழகுதமிழ்ச் சொல்லிருக்க
வாய்நுழையாப் புன்மொழியே மக்கள் காதில்
தானொலித்தும்; இல்மகளை விரட்டி விட்டுத்
'தாசி'யவள் மனைபுகுதல் கண்ட பின்பும்
தேனொலியோ வேம்பொலியோ நமக்கேன் வம்பு
சிவன்பெருமைக் கதைகேட்க இதுவே போதும்
ஏனிதிலே வீண்பொழுது கழிக்கின் றீர்நீர்
எனவினவும் தமிழ்மகனும் வாழ்கின் றானே!

மொழிக்காக உயிரீயும் தமிழர் எண்ணம்
முன்னையநம் மறக்குலத்தோர் விழுப்புண் போலே
அழியாது வளர்ந்திடுதல் கண்ட பின்பும்
அன்றொருநாள் வ.உ.சி தவழ்ந்த மண்ணில்
எழிலொழுகும் தமிழகத்திற் கந்தப் பேரே
ஏனின்னும் நிலைக்கவிலை என்றே கேட்டு
இழிதகையோர் மறுத்திடவே மறைந்த மேலோன்
என்னையன் சங்கரலிங் கத்தைக் கண்டும்...

உணவருந்த மறுத்துதமிழ்க் குயிர்கொ டுப்போர்,
உறுசிறையில் வாடிடுநம் உடன்பி றந்தோர்,
மணந்திடுவாய்ச் சிறுவருடன் பெற்றோர் தாமும்
மடிவரிந்து போர்க்கோலம் பூண்ட பின்பும்
பணம்வருமென் றிளித்துப்பல் தெரியக் காட்டி
பத"ராகாஷ் வாணி"யிலே குலைத்துப் போகும்
பிணமுண்ணும் புழுவாகத் தமிழர் மண்ணில்
பிறந்தவனும் இன்றையோ வாழ்கின் றானே!

—நாஞ்சில் ஆ. ஆரிது.

6. மெய்ப்பாட்டின் விளைவுகள்.

★ இராம. இராமநாதன், பி. ஏ. (ஆனர்ஸ்.) ★

தொல்காப்பியர் உளநூற் கூறுபாடுகளைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டும் விற்பன்னர் என்றால் உண்மை. மனிதனுடைய முக வேறுபாடுகளிலிருந்து அவனது உள்ளத்துணர்ச்சிகளை அறியும் ஆற்றல் சிலருக்கே உண்டு. அவ்வாற்றல் எல்லா மாந்தருக்கும் எளிதிற் கைவரப் பெறுவிட்டாலும், அவ்வாற்றலைத் தெளிவுடையார் எடுத்துக் கூறினால் அனைவரும் உணர்தல் கூடும். அதுபோல் சங்ககால மாந்தரிடை வாழ்ந்த தொல்காப்பியர் மக்களிடையே நடமாடி அவர்தம் உணர்ச்சி வேறுபாடுகளை ஊன்றிக் கற்று, அவை தமக்கு அடிப்படைகளையும் ஆய்ந்து தெளிந்து எடுத்து இயம்பியதே "மெய்ப்பாட்டியல்" ஆகும்.

உலகமாந்தர் அனைவருக்கும் அடிப்படை மெய்ப்பாடுகள் எட்டே ஆகும். அவை தோன்றுதற்குரிய நிலைக்களன்கள் முப்பத்திரண்டு (32) என்பர். இந்த உண்மையைச் சற்று விளக்கமாகக் கூறாமல் அடக்கிக் கூறினால் பதினாறு என்றும் இயம்பலாம். இதனுள்ளே தோன்றாத மெய்ப்பாடே தோன்றாது என்று உறுதியாகக் கருதலாம். மெய்ப்பாடுகள் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டும் அடிப்படையான மெய்ப்பாடுகளாகும்.

மெய்ப்பாடுகள் தோன்றக்கூடிய சுற்றுச் சூழல்களைப் பற்றிக் கூறும் தொல்லாசிரியர், அவை எந்தச் சூழ்நிலையில் தோன்றும் என்பதையும் தெளிவுறக் காட்டும் பான்மை சிறப்பாகும். மெய்ப்பாடுகளை நன்குணர்ந்த பின்னர்தான் அவை எழுதற்குரிய இடங்களைப் பற்றி எண்ண முடியும். "மெய்ப்பாடே எது?" என்று அறியா முன்னர் எதுவும் கூறுதற்கு இயலாது.

ஒருவரைப் பார்த்துப் பிறர் இகழ்ச்சி காரணமாகச் சிரிப்பர்; தவறு கண்டு சிரிப்பர்; மடவோர் கூற்றுக் கண்டு நகைப்பர்; பேதைமையுடையோரைக் கண்டு சிரிப்பர் இது இயல்பாகும். எள்ளல், இளமை, பேதமை, மடன் என்று கூறப்பட்ட நான்கின் அடிப்படையில் நகை எழும் என்கிறார்.

அழுகை ஏற்படுவதை நாம் காண்கிறோம் நோய் காரணமாக, சிறுவர் ஒன்று கிடைக்காத காரணமாக, பிறர் தம்மை அளவிறந்து இழித்தல் காரணமாக அழுவர். தொல்காப்பியர் கூறுவன: "இழிவு, இழவு, அசைவு, வறுமை காரணமாக அழுகை தோன்றும். இழவு என்பது உயிரானும், பொருளானும் இழித்தல். அசைவு என்பது தன்னிலையிலிருந்து தாழ்தல்.

இளிவரல் என்றவுடன் பொருள் புலனாதல் இல்லை. மூப்பு ஏற்பட்டவரைக் கண்டு, அவரது தளர் நடையை, சுருங்கிய தசையை, ஊன்றிய கம்பை, கூன் விழுந்த முதுகைக் கண்டு இளையோர் கைகொட்டி விளையாடுவது இளிவரலின் ஒரு வகையாகும். பிணி காரணமாய் உடம்பு பயனற்றது எனல் இழித்தல். வருத்தம், மென்மை காரணமாகவும் இம்மெய்ப்பாடு தோன்றும் என்கிறார்.

வியப்பு ஏற்படக்கூடிய செயல்களைக் கண்டு விரிந்த கண்ணுடையவராவோம். எவற்றின் அடிப்படையில் மருட்கை தோன்றும்? என்றால் புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் காரணமாய்த் தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். எக்காலத்தும் காணாத பொருளைக் காணல் புதுமை; கண்ட பொருளைவிடப் பன்மடங்கு பெரிய உருவான பொருளைக் காணல் பெருமை; நுண்ணியன கண்டு வியத்தல் சிறுமை; திடீரெனப் பணக்காரனாதல் போன்றது ஆக்கம் ஆகும்.

அச்சம் கொள்ளாத நிலை உலகில், மக்களிடம் இல்லை. எங்கும் இல்லாத பேயைக் கண்டவர்போல் அஞ்சிச் சாவார் பலர் உண்டு. ஆனால் தொல்காப்பியர் அச்சத்திற்கு அடிப்படை "அணங்கு, விலங்கு, கள்வர், இறை" என்பனவாகும் என்றார். அணங்கு என்றால் பெண்; விலங்கும், கள்வரும், வேந்தரும் அஞ்சத்தக்கவர் என்றார்.

சிறந்த செயல்களைச் செய்பவர் பலரால் போற்றப்பட்டுப் பெருமிதம் அடைவர். அவ்வாறு பெருமிதம் அடைய வழி காட்டுவன - கல்வி, தறுகண், புகழ்மை, கொடை ஆகும்.

அச்சத்திற்கும் வெகுளிக்கும் இடையே சிறு வேறுபாடு உண்டு அச்சம் என்பது ஒன்றைக் கண்டவுடன் தான் தோன்றும் மெய்ப்பாடு ஆனால் வெகுளி என்பது செயல் நடைபெற்ற அல்லது நடைபெறும்போது ஏற்படும் மெய்ப்பாடு. வெகுளி தோன்றுதற்கு உறுப்பறை, குடிகோள், அலை, கொலை முதலியன இடமாகும் என்கிறார் தொல்காப்பியர். உறுப்பறை என்றால் உடல் உறுப்புக்களை கை, கால் போன்றனவற்றை அறுத்தல்; குடிகோள் என்பது தம் கீழ் வாழ்வோரைக் கொடுமை செய்தல்; அலை என்பது வைதலும், அடித்தலும் ஆம்; கொலை என்பது அறிந்த செய்தி. இவற்றால் வெகுளி தோன்றும்.

இறுதியாக உவகை தோன்றுதற்குரிய இடங்கள் செல்வம், புலன், புணர்தல், விளையாட்டு ஆகும் என்றார். அளவற்ற செல்வத்தாலும், ஐம்புலன்களால் நுகர்தலாலும், மகளிரோடு புணர்தலாலும், ஆறு-சோலைகளில் விளையாடுதலாலும் மகிழ்ச்சி பிறக்கும் என்றார்.

மேலே காணப்பெற்ற மெய்ப்பாடுகள் பொதுவாக எல்லார் மாட்டும் நிகழ்வது, ஆனால் சிறப்பாகப் பெண்டிர் மாட்டே நிகழும் மெய்ப்பாடுகள் எட்டு வகையைத் தொடர்ந்து கூறுகிறார். இவற்றை ஒன்றொன்றாகப் பார்ப்பதைவிட பொதுவாகப் பார்த்தல் பொருந்தும். தலைவன் தலைவி முதற் சந்திப்பில் தலைவனைக் கண்டவுடன் தலைவி மாட்டு நிகழும் மெய்ப்பாடுகள் சிலவற்றைக் கூறுகிறார். தலைவனைப் பார்த்துக்கொண்டே நின்றால் பிறர் தகாதன கூறுவர் என்று காதிலேயிருந்து ஒன்றினைத்தானே கழற்றிக் கீழே போட்டுத் தேடுதல்போல நிற்றல்; தலைமுடியை விரித்தவாறு இருத்தல்; உடையை மாற்றி மாற்றிக் கட்டுதல்; அணிந்த அணிகளைத் திருத்தல்; இரு கையையும் தலைக்குமேல் எடுத்துக் கட்டிக்கொள்ளுதல் - முதலியன தலைவி புணர்ச்சிக் குறிப்பினள் என்பதைக் காட்டும் என்கிறார். இதனைத் தொடர்ந்து காதல் வயப்பட்ட உள்ளங்கள் நிலையினைக் கவினுறக் காட்டும் பான்மை படித்தின்புறக் கூடியது. உளநூலில் ஆழ்ந்த பயிற்சியும், ஆராயும் திறனும் உடையாரே குறிப்புகளைக் கொண்டு உள்ளத்தின் நிலையை உரைக்க முடியும். உள்ளம் கள்ளமுடையதா? காதல் வயப்பட்டதா? கவலைக்கிடமானதா? களிப்புடையதா? என்பதை அவரவர் தம் முகக்குறியாலும் - நடை - உடை - பாவனைகளாலும் அறிகின்ற முறை தொல்காப்பியத்துள் காணப்படுகிறது.

'ஒரு பெண் - மங்கை அவள் - குழவிப்பருவம் முதல் மங்கைப் பருவம் எய்தும் வரையில் தன் தாயைப் பிரியாதவள் - தூங்கும் போதும் தாயின் இடையைத் தளிர்க் கரத்தால் தழுவித் தூங்குபவள். இளமையின் எழில் தன் முழு வலிமையையும் மங்கைபால் செலுத்திற்று. அன்று - மங்கையை அவள் தாய் உச்சி மோர்தலுக்குக் கட்டியணைக்க முயன்றாள் - மங்கையோ கூச்சம் மேலிட்டவளாய் ஓடிவிட்டாள்! தாயோ வியந்து நின்றாள்! இத்தனை காலமும் எவ்வேறுபாடும் அறியாத தன் மகள் இன்று புதுமை கண்டவள் போல் புலப்படுவதன் பொருள் காண முயல்கிறாள்! தாய்க்கு எப்படித் தெரியும்? தலைவி முதல்நாள் தலைமகனைக் கண்டதும், களவு கொண்டதும்!

இங்கு காணப்பட்ட செயலைக் கொண்டு தலைவியின் 'வெட்கம்' தாய்க்குப் புலப்படுகின்றது; ஆனால் அதன் பொருளை அறியமுடியவில்லை. கூர்த்த அறிவும், உணரும் ஆற்றலும் உடையார் இச்செய்கைக்கு அடிப்படை 'காதல்' என்பதை எளிதில் உணர்வர்.

மெய்ப்பாடுகளுள் பிறர் அறியுமாறு காட்டத்தக்கவை இவை என்றும், காட்டத்தகாதவை இவை என்றும் பகுத்துக் கூறியுள்ள முறை சிறப்புடைத்து. வீரம் காரணமாக எழக்கூடிய மெய்ப்பாடு வேற்றோர் அறியலாம் - அவலம் காரணமாக அழுகை எழக்கூடும். அதனைக் காட்டலாமா? வேண்டாமா? என்பது ஆய்வுக்குரியது. பொறாமை, வெகுளி, வெறுப்பு போன்ற மெய்ப்பாடுகள் இலட்சிய தலைவன் - தலைவியிடம் இருக்கக்கூடாது என்று விளக்குகிறார்.

இம்மெய்ப்பாடுகள் உளநூல் அடிப்படையில் கண்டால் தமிழ் மக்கள் வாழ்வியல் உன்னத இலட்சியங்களைக் கொண்டது என்பதும், குறிப்பிட்ட வரையறைகளை அடிப்படையாக உள்ளது என்பதும் தெள்ளிதிற் புலனாகும். இம்மெய்ப்பாடுகளை ஒட்டி இன்றும் கூர்த்த அறிவுடையார் உள்ள இயல்புகளைக் கூறமுடிகின்றது என்றால் தொல்காப்பியத்தின் சிறப்புப் புலனாகின்றது.

★

அடுத்த கிழமை—

தொல்காப்பியத்தில்...

"பொருளியலில் பொருள்"

என்னதான் நினைத்தான்!

கொஞ்சத்தான் என்றேனா— இன்னும்
மிஞ்சத்தான் என்றேனா?
கொஞ்சந்தான் என்றானே— பின்னர்
மிஞ்சத்தான் செய்தானே!

இதழென்று நினைத்தானா— இல்லை
இரும்பென்று நினைத்தானா!
பதித்தானே வடுவங்கே— "இன்னும்
பசியடி தா" என்றானே!

கன்னத்தைக் கடித்தானே— அதைக்
கல்லென்று நினைத்தானா!
"இன்பந்தான்" என்றானே— "அத்தான்
எனக்குந்தான்" என்றேனா!

கையென்று நினைத்தானா— கட்டும்
கயிறென்று நினைத்தானா!
தையலேகட் டென்றானே— பின்னர்
கைபகற்ற விடுத்தானா!

—அ. மாரிமுத்து

அணைத்த கையுள்ளும் படையுண்டு!

"வீரர் தலைவ! பொங்கியெழும் கடலாகிப் புறப்படு போருக்கு! வடகலிங்க வேந்தனும் அனந்த வன்மன்—வாவென அழைக்கின்றான்! சோழர்தம் பெருமையினை கலிங்கத்திற்குக் காட்டு! அம்மண்ணிலே புலிக்கொடியினை நாட்டு! எதிர்ப் போரை இம்மியும் இரக்கமின்றி வாட்டு!

நின் தடந்தோள் வலிமையெங்கே? படைத்தொகைகளெங்கே? அத்தனையும் மடைதிறந்த வெள்ளமெனப் பாயட்டுமங்கே! தடையேதும் நான் சொல்லேனிங்கே! புறப்படு...புறப்படு!" எனக் கட்டளையிட்டான் குலோத்துங்கன்!

அரசன் ஆணை ஏற்றுப் புலியெனச் சீறினன்...படைத்தலைவனும் கருணாகரத் தொண்டைமான்! வில்லிலிருந்து விடுபட்டு துள்ளிய கணையாகிப் பாய்ந்தான்—வீரர் குழாத்தைக் கூட்டினன்—வீரவுரையாற்றினன்—வெற்றிக்கு வழி வகுத்தான்!

பறைகள் அதிர்ந்தன—முரசுகள் முழங்கின—கொடிகள் உயர்ந்தன—கோஷங்கள் விண்ணைத் தாவிப் பாய்ந்தன! புறப்பட்டன படை அணிகள்!

மலைக்கூட்டமோவென வியக்கும் யானைப்படை! ஆர்த்தெழுந்து வரும் கடலலையோ என எண்ணும் குதிரைப்படை! விற்படை—வேற்படை—தேர்ப்படை! அத்தனையும் பொங்கியெழுந்து பிரளயம்போல் நிறைந்து விரைந்துகொண்டிருந்தன கலிங்கத்தை நோக்கி!

இடி இடித்து மின்னுவதுபோல கலிங்க வீரரும், சோழ வீரரும் களத்திலே கலந்தனர்!

எங்கும் பேரிரைச்சல் எதிரொலித்து நின்றன. 'கலிங்கம் வெல்க! அனந்த வன்மன் வாழ்க!' என்ற ஒலிகள் ஒரு புறமும், 'புலிக்கொடி ஓங்குக! புவியாளும் குலோத்துங்கன் வாழ்க!" என்ற வாழ்த்துக்கள் மற்றொரு புறமும் ஒலித்து ஒலித்து நின்றன!

போர் மிகக் கடுமையாக நடந்து கொண்டிருந்தது! வீரர்கள் மிகக் கொடிய யானைகளின் தலைகளை வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தனர்! அச்சமயம் அதன் தலைகளிலிருந்து வெண்முத்துக்கள் பளீர் பளீரென்று மின்னித் துள்ளித் தெரித்ததாம். இக்காட்சியைச் சித்தரிக்கும் புலவர், சிறந்த வீரமகளொருத்திக்குத் திருமணம் நடக்கும் சமயம் பொரி சொரியப்படுவது போலிருந்தது என்கிறார்.

அது இதோ:

"வெங்களிற்றின் மத்தகத்தின்
வீழும் முத்து, வீரமா
மங்கையர்க்கு மங்கலப்
பொரி சொரிந்த(து)
ஒக்குமே!"

இதோடு நில்லாமல் மேலும் பல களக்காட்சிகளை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறார் புலவர்!

குன்றென நகர்ந்துவரும் யானைகளின்மேல் அமர்ந்து போர்புரியும் வீரர்கள் ஒருவருக் கொருவர் சந்திக்கும் சமயம் வெட்டி வீழ்த்தும் தலைகள் உணர்ச்சித் துடிப்பிலே உயரப் பறந்து பந்தென வீழ்ந்து கொண்டிருந்ததாம்!

இக்காட்சிக்கு ஒப்புமை கூறும் புலவர், பெருமையுடைய வீரமிகுந்த பெண் ஒருத்தி அம்மானை ஆட்டத்தில் மேலே எறிந்தாடும் விளையாட்டுக் கருவிகளைப்போல் காணப்படுகிறது பாருங்கள், என்கிறார்.

அது இதோ:

"யானைப்படைச்சூரர் நேர்ஆன
போழ்(து) அற்(று)
எழுந்(து)ஆடு கின்றார்தலை
பானச்சயப்பாவை
விட்(டு) ஆடும்
அம்மானை வட்(டு)
ஒத்தல் காண்மின்களோ!"

யானைப் படையின் நிலை இவ்விதமிருக்க, வாட்போர் செய்யும் வீரர்கள் சக்கரமெனச் சுழன்று போர் புரிந்து கொண்டிருக்கையிலே, எதிரிகளுடைய வாளின் வடுபட்டு தொடைகள் இரண்டும் அறுபட்டு நிலத்திலே விழுந்து கிடந்தனராம் வீரர்கள்!

அவர்களையும் அழித்தொழிக்கப் புறப்பட்டு வரும் களிறுகளைக் கண்டார்களாம் கால்களறுபட்டு வீழ்ந்து கிடக்கும் அவ்வீரர்கள்! உடனே தங்களது வலிமை அழியும்படியாக ஒரு தொடையைச் சுழற்றி, எதிர்க்க வரும் வேழத்தின்மேல் எறிந்தார்களாம்! மீண்டும் ஏதாவது தன்னைத் தாக்க வருமாயின் அவற்றின் மேல் வீசியெறிய மற்றொரு காலின் தொடையை விட்டு வைத்தார்களாம்! சாகும் தருவாயிலும் வீரத்தின் வேகம் குறையாதவர்கள்! அந்தத் தியாகச் சின்னங்களை நமக்கு இங்கே காட்டுகிறார் புலவர்!

இதோ அது:

"இரு தொடை அற்(று)
இருக்கும் மறவர்கள்
எதிர் பொருகைக் களிற்றின்
வலிகெட
ஒரு தொடையைச்
சுழற்றி எறிவார்கள்;
ஒருதொடை இட்டு
வைப்பர் எறியவே!"

மேலும் இங்கிருந்து நம்மை வேற்படையின் சாதனைகளை விளக்க அழைக்கிறார் புலவர்.

கொட்டும் மழையென வீரர் கைவிட்டு பிரியும் வேல்கள்—ரீங்காரமிட்டு சுற்றித் திரிந்தன! சுற்றி எங்கும் போய்விடவில்லை, பகைவர்கள் உணர்ச்சி வசத்தால் உந்தப்பட்டு "அழியுங்கள்-கொல்லுங்கள்-குத்துங்கள்" என்று வாய் பிளந்து கூக்குரலிடும் சமயம் அவர்களின் வாயினுள் போய் தைத்ததாம்! எதிர் பாராத நிலையிலே தைத்த வேலினை வேதனையோடு பறித்தெடுப்பதற்காக அவற்றை வலக்கையால் பிடித்தவண்ணம் களத்திலே சாய்ந்து கிடந்தனராம் அந்த வெஞ்சமருக்கஞ்சா வீரர்கள்!

இக்காட்சியினுக்கு ஒப்புமை கூறும் புலவர், "ஊதுகொம்பை பிடித்து எக்காளமூதுகிறவர்களைப் போல் காணப்படுகின்றார்கள், பாருங்கள்!" என்று கூறுகிறார்.

அதுதான் இது:

"வாயினில்புகு வேல்கள் பற்றி
வலக்கை யோடுநி
லத்திடைச்
சாயு மற்றவர் காளம் ஊதிகள்
தம்மை ஒத்தமை
காண்மினோ!"

சோழருக்கும் கலிங்கருக்கும் நடந்த இந்த பயங்கரப் போரிலே வெற்றி மாதா சோழர் பக்கம் நின்றாள்! புலிக்கொடி வானளாவிப் பறந்து நின்றது! இதைக் கண்ட கலிங்கர், வெற்றி வீரனாய்த் திகழுகின்ற கருணாகரத் தொண்டமானின் கண்களிலே படாமல் அவன் வெற்றி கண்ட அந்த நாளில் உயிர்தப்பிப் பிழைக்க மேலாடை கீழே விழுவதையும் கவனியாமல், இடுப்பில் உடுத்திய ஒரே ஆடையுடனே ஓடுகின்றனராம்!

இவ்விதம் கலிங்கம் இழந்து ஓடும் கலிங்கரை நமக்கு இங்கே அறிமுகப்படுத்துகிறார் புலவர்:

"ஒரு கலிங்கம் ஒருவன்
அழித்த நாள்
ஒரு கலிங்கம் ஒருவர்
உடுத்தே!"

கடற்கரை யோரத்திலே காட்சியளித்துக் கொண்டிருக்கிற கலிங்கத்தை வென்று, அக்கலிங்கத்திற்கதிபனும் அனந்தவன்மனைக் கைது செய்து கொண்டு, ஜெயபேரிகை முழங்கத் தன் நாடு நோக்கி வந்து கொண்டிருக்கிறான், கலிங்கம் வென்ற வேள் தொன்டைமான்!

குறிப்பிட்ட தினத்தில் வருவதாய்ச் சென்றிருந்த வீரர்கள், போரின் காரணமாகக் காலம் கடந்து வர வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

"படை ஏந்திய பகைவர் கைகளை நொறுக்கியாகிவிட்டது இனிப் பாகு மொழிப்பாவையரின் காந்தள் விரலுடைய கைகளைப் பிடித்து துளைக்கும் துன்பத்தை எல்லாம் இழக்க வேண்டும்!" என்ற ஆசையோடு ஓடிவந்தனர், போர் மறவர். ஆம்! அந்தக் கைகள் தானே அவர்களை அந்திதோறும் அணைத்து மகிழ்வித்தவை! ஊருக்குள் நுழைந்ததும் வீடடைந்து கதவைத் தட்டினராம், அன்புடன் அள்ளி அணைக்கும் கைகளை நாடி. ஆனால் அக்கைகளில் என்று படைக்கருவி வந்தனவோ? மறுக்கிறோம் என்ற படை தாங்கி அவை பின்வாங்கிக்கொண்டனவாம். சாத்திய கதவைத் திறக்க மறுத்து விட்டனவாம். ஆமாம்! இப்படி **அணைத்த கையுள்ளும் படையுண்டு** என்பதை விளக்குகிறான் புலவன் பாருங்கள்!

கலிங்கப் போருக்குச் சென்று திரும்பிய ஆடவர்களை அவர்களுடைய மனைவியர் யாவரும் காணக்கூடாது என்று ஊடல் புரியக் கதவை மூடிவிட்டார்களாம்! இங்கே குலோத்துங்கன் பாட்டுடைத் தலைவனாகவும், பெண்கள் ஊடுவதாகவும் கவி கற்பனை செய்து பாடுகின்றார்!

குளிர்மயமான இனிய தத்தை மொழி பேசி உள்ளத்தைத் துளைக்கின்ற பெண்களே! சுருண்டு விழுந்த கூந்தல், தென்றலிலே அசைந்தாட, கால்களில் அணிந்திருக்கும் கிண்கிணிகளிலிருந்து இன்பநாதம் எழுந்து வர தூங்கியெழுந்த பெண்மயிலைப் போல் நடந்து வந்து, இவ்வாயிற் கதவுகளைத் திறவுங்கள்!

"சுரிகுழல் அசைவுற
அசைவுறத்
துயில் எழூம் மயில்என
மயில்எனப்
பரிபுரம் ஒலிஎழ ஒலிஎழப்
பனிமொழி யவர்!
கடை திறமினோ!"

பொங்கி வரும் பெருநிலவின் பேரெழிலால் அங்கமெலாம் புல்லரித்து, பால் நிலவு தருகின்ற வேதனையைத் தாளாது அவதியுற்று அங்கிருக்கமுடியாமல் குளிர்நிலவின் ஒளிக்கதிருக்குப் பயந்தோடி, பளியறையினிலே பாய்ந்தோடித் தாளிட்டு நின்று பார்த்து, அங்கோ காதல் நோய் காத்திருந்து தொல்லைதர, ஐயகோ! இதுவும் புழுக்கறையாக அல்லவோ இருக்கின்றது! என்று அங்கிருக்கவும் பயப்படும் தன்மையுடைய பெண்களே! பொன்னாலான அழகு நிறைந்த இக்கதவுகளைத் திறவுங்கள்! என்பதை இப்படிப் பாடுகிறார்!

"பொங்குர் மதிக்கே
தினம் நடுங்கிப்
புகுந்த அறையை
நிலஅறை என்(று)
அங்கும் இருக்கப்
பயப்படுவீர்!
அம்பொற் கபாடம்
திறமினோ!"

என்று கூறிக் காத்திருந்து பார்த்துவிட்டு மேலும் கூறலானார்கள்!

"அன்னத்தை ஒத்த அணங்குகளே! எங்கள் பொருட்டுவேண்டாம்! சிறப்பைப்பற்றிக் கூறுகிறோம்! அதை நினைத்தாகிலும் எங்கள் மீதிருக்கும் ஊடலைத் தவிர்த்துக் கதவைத் திறவுங்கள்!" என்று மீண்டும் கெஞ்சினர்! ஆனால்.....அந்த அஞ்சுகங்களின் நெஞ்சங்களில் ஊடல் மறைந்து கூடல் நினைவு தோன்றியதோ என்னவோ?

—லோகிநாதன்.

உருவறியாக் காதலின் உறுதி

தேனினிமை என்பார் தெவிட்டாத உன்குரலின்
கானினிய கீதமொழி கேட்காதார்—மான்விழியே!
உன்குரல்தான் கேட்டறிவேன்; உள்ளுருவைப் பார்த்தறியேன்
என்னுயிரே நீயின் றறி!

வடிவழகி நீயென்றென் வன்நெஞ்சம் கூறும்
முடிவுசரி யா?மோ கனமே—பிடித்துவிட்ட
சாதி சடங்கென்னும் சங்கிலியை உன்னன்பால்
பாதியாய் ஆக்கிடுவேன் பார்

கிள்ளை உனக்கேற்ற கூடாக நானிருக்க
உள்ளம் திறந்து உரைக்கின்றேன்—கள்மொழியுன்
கண்ணின் கடைப்பார்வை கட்டளையாய் நோக்கினிலிம்
மண்ணிலே மாளும் பகை.

—இரத்தின. சனார்த்தனன்.

எழுந்தது இத்தாலி!

1789-ம் ஆண்டு பிரான்சில் நடந்த பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக 'தன்நாடு, தன் இனம்' என்கிற ஒரு தேசிய உணர்ச்சி ஐரோப்பாவின் மூலை முடுக்கெல்லாம் பரவியது. கிளர்ந்தெழுந்த தேசிய உணர்ச்சியின் அனலைச் சகிக்கமுடியாமல் காலனி முறையின் மூலம் தங்கள் கால்களை ஊன்றிக்கொண்ட கயவர்கள், ஆதிக்க வெறிக்கும் ஐசுவரிய வாழ்விற்கும் பாதை அமைத்துக்கொண்ட வல்லரசுகள். தங்கள் அடிமை நாடுகளின் மீது வைத்திருந்த காதலைத் தளர்த்திக் கொண்டன. எடுத்தார் கைப்பிள்ளையாக — எடுபிடி வேலைக்காரனாக இருந்த 19-வது நூற்றாண்டு இத்தாலியின் வாழ்க்கை குறிப்பு— ஆந்திரம், கேரளம், கன்னடம் தமிழ்நாடு ஆகிய நான்கு பகுதிகளாகப் பிரிந்து வடநாட்டான் ஆதிக்க வெறிக்கு "காலனி" நாடாக இருக்கும் திராவிடத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டி. பல பகுதிகளாகப் பிரிந்து கிடந்த இத்தாலியை ஒன்றுபடுத்தி இத்தாலியின் ஒற்றுமைக்காக 19-ம் நூற்றாண்டில் ஓர் அண்ணல், தோன்றினான். அவனுடைய மாபெரும் முயற்சிக்குப் பிறகுதான் இத்தாலி நல்லதொரு நிலையை அடைந்தது அதற்கு முன் இத்தாலியின் நிலை என்ன? சீரழிந்து சீந்துவாரற்று, வரிப்பணத்தை கோடிக்கணக்கில் கொட்டிக் கொடுத்தும் கொடுமைப்பட வேண்டிய நிலையில் இருக்கும் இன்றைய அடிமை திராவிடத்தின் நிலைதான், அன்றைய இத்தாலியின் நிலையும். இனவழி ஒன்றுபட்ட திராவிட மக்களை எவ்வாறு ஒருவரோடொருவர் மோதும்படியான சூழ்நிலையை உண்டாக்கித் தன் ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்துகிறதோ டில்லிப் பேரரசு— அதே காரியத்தைத்தான் இத்தாலியின் எதிரிகளும் அன்று செய்தனர். இத்தாலியின் வடபகுதி ஆஸ்திரியா என்ற ஆதிக்க ஓநாயின் காவலுக்கு உட்பட்டிருந்தது. ஆஸ்திரியர் வட இத்தாலியில் இத்தாலியருக்குவிரோதமாகச்செய்து வந்த சதிச் செயல்கள் தேசிய உணர்ச்சிக்கு அடிமைப்பட்ட ஒரு சில நல்லவர்களின் இதயத்தைக் கொந்தளிக்கச் செய்தன. அம்பிரியா, ரோம் ஆகிய பகுதிகள் போப் என்கிற அகில உலக கத்தோலிக்கக் கிருஸ்தவத் தலைவரால் ஆளப்பட்டு வந்தன. நேப்பிள்ஸ், சிசிலி ஆகிய பகுதிகள் பார்பன் இளவரசன் ஒருவன் ஆளுகைக்குட்பட்டிருந்தது. சார்டீனியா என்ற பகுதியை மட்டும் இத்தாலிய இளவரசன் ஒருவன் ஆட்சி செய்து வந்தான். இத்தாலியின் பெரும் பகுதி அன்னியர்கள் கையில் சிக்கிச் சீரழிந்துகொண்டிருந்தது. அரசியல் கொந்தளிப்பும் சமுதாயச் சச்சரவுகளும் தோன்றிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில்தான் 19-வது நூற்றாண்டின் அண்ணல் தோன்றினான். ஈன்றெடுத்த என் அன்னையைப் பழிக்கும் இழி நிலையைப் போக்குதற்குப் புறப்பட்டேன் ஆன்ற புகழ் இத்தாலியின் பழம் பெருமையை அழிப்பவருக்கு அறிவூட்ட திட்டமிட்டேன் எனப் புரட்சிகுரல் கிளப்பி, புத்துலகம் காணப் புறப்பட்டான் கர்மவீரன் ஜோசப் மாஜினி. அன்னிய ஏகாதிபத்தியத்தினின்று இத்தாலியை விடுவித்துச் சிதறிக் கிடக்கும் பகுதிகளை ஒன்றுபடுத்தி ஒரு சிறந்த இத்தாலியக் குடியரசை நிறுவ வேண்டும் என்பது மாஜினியின் நோக்கம். "சமுதாயச் சீர்திருத்தம் இன்றி நான் நினைக்கும் காரியத்தைச் சாதிக்கமுடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்" என்று மாஜினியே கூறுவதின் மூலம் அரசியல் விழிப் புணர்ச்சிக்குச் சாவி எங்கே இருக்கிறது என்பதை மாஜினி உணர்ந்து கொண்டது நன்றாகத் தெரிகிறது. அரசியல், கல்வி, புரட்சிகரமான எண்ணங்கள், சிந்தனையில் மறுமலர்ச்சி முதலியவற்றை மக்கள் மனத்தில் ஊட்ட வேண்டும் என்று விரும்பினான் மாஜினி. "கொடிகட்டி நாம் வாழ்ந்தோமே ஒரு காலத்தில்- அந்த கண்கொள்ளாக் காட்சியை உங்கள் கண்முன் கொண்டுவாருங்கள். நமது முன்னோர் பெற்ற மாபெரும் தியாகத் தழும்புகளையும் நமது இனத்தின் பழம்பெரு நாகரிகத்தையும் நமது கலாசாரம் உலகுக்கு அளித்த காணிக்கையையும் உங்கள் மனக்கண்ணால் சிந்தியுங்கள். இதன் பிறகும் நீங்கள் மிதிபட்ட நாகமாக- அடிபட்ட புலியாக மாருவிடில், நீங்கள் இத்தாலியர்களே அல்ல" என்று கர்ஜித்தான் மாஜினி. மாஜினியின் அரசியல் தத்துவம் அஹிம்சா முறையை அணைத்துச் செல்ல விரும்பவில்லை. "இத்தாலியின் ஒற்றுமையும் விடுதலையும் பலாத்காரத்தின் மூலம்தான் நடைபெற வேண்டுமென்று இருந்தால் அதைத் தடுக்க என்னால் முடியாதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறிப் போர் வெறியை மக்களுக்கு ஊட்டினான் மாஜினி. "இளம் இத்தாலி" என்ற ஒரு சமுதாய- அரசியல் விழிப் புணர்ச்சிக் கழகத்தை இத்தாலியில் ஆரம்பித்தான் மாஜினி. நாட்டு விடுதலைவிரும்பிய இளம் வாலிபர்கள்- சமுதாய மறுமலர்ச்சி காணத் துடித்த மாணவர்கள், "எனை ஈன்ற இந்நாட்டிற்குத் தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால் செத்தொழியும் நாளெனக்கு திருநாளாகும்" என்று சுதந்திரக்குரல் கொடுத்து அந்தக் கழகத்தில் அங்கத்தினர்களாகச்சேர்ந்தனர். வாலிபர்கள் பலத்தை வகையாக ஒழுங்குபடுத்தி, தொகையாக வந்த பகைவர்களைத் தூள் தூளாக்க வேண்டும் என்று திட்டம் தீட்டினான் மாஜினி. 'இளம் இத்தாலி கழகத்தில் உள்ள வாலிபர்கள் நாடெங்கும் சமுதாய சீர்திருத்த பிரசாரத்தையும் அரசியல் விழிப் புணர்ச்சியையும் பக்குவமாகச் செய்தனர்' மாஜினியின் கழகத்தில் ஒரு உறுப்பினனாக சேர்ந்தவன்தான் மாஜினியின் நோக்கத்தை நிறைவேற்றிய கடமை வீரன் கரிபால்டி. இத்தாலியின் ஒற்றுமையும் விடுதலையும் மாஜினி கரிபால்டி, கவூர், விக்டர் எமானுவேல் ஆகிய நால்வரின் முயற்சியால் ஈடேறின. இத்தாலியின் ஒற்றுமைக்காகவும், விடுதலைக்காகவும் நடந்த இரணகளப் போரில், இந்த நால்வரின் சேவை சரித்திரத்து ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கிறது. "என்னுடைய இத்தாலி உலகத்திலே ஒரு மாபெரும் புண்ணிய பூமியாகப் பெருமை பெற்றுத் திகழ வேண்டும் என்பதுதான் என் ஆசை. இதற்காக என் அரசியல் கொள்கைகளையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று நாட்டு வெறி பிடித்து கூக்குரலிட்டவன் கரிபால்டி. ஏக இந்தியா வாதம் ஒரு ஏமாற்று வித்தை என்று அறிந்தும் வடவருக்கு வெண்சாமரம் வீசும் ஒரு சில சுயநலக்கார காங்கிரஸ் — கம்யூனிஸ்ட் நண்பர்கள் போலல்லாமல் இத்தாலி முழுவதுமே ஆஸ்திரியர் போன்ற அன்னியர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கக் கிளம்பியது. கரிபால்டியின் குரல் கேட்டுச் சமுதாயமே எழுந்து வரத் தயாராக இருந்தது. 1834-ம் ஆண்டு தென் அமெரிக்காவுக்கு ஓடிய கரிபால்டி, அங்கு பிரசித்திப்பெற்ற கொரில்லாப் போர் முறையை (மறைந்திருந்து திடீரென எதிரிகளைத் தாக்குதல்) கற்று, அதை 1860-ம் ஆண்டு இத்தாலி விடுதலைப் போரில் ஆஸ்திரியர்களுக்கு எதிராக பயன்படுத்தினார். 1848-ம் ஆண்டு தன் வீரர்களுடன் மாஜினிக்கு ஆதரவாகப் போர்க்குரல் கொடுத்தான் 1859-ம் ஆண்டு மீண்டும் தேர்ந்தெடுத்த 1000 'செஞ்சட்டை வீரர்'களுடன் இத்தாலியில் உள்ள சிசிலியில் வந்து இறங்கினான். ஆதிக்க வெறி பிடித்தோரிடமிருந்து தமை மீட்பதற்காக வந்த போர் மறவன் என மக்கள் அவனைக் கொண்டாடினர். உடனடியாக 20,000 வீரர்களைத் தயார்படுத்தி சிசிலி மக்கள் கரிபால்டிக்குத் துணையாக அனுப்பினர். விடுதலை உணர்ச்சியுள்ள தன் மக்களின் தாரா ஊக்கத்தையும் ஆர்வத்தையும் கண்டு மகிழ்ச்சி வெறி கொண்ட கரிபால்டி தன் வெற்றிக் கொடியை முதல் போரிலே நாட்டினான். சிசிலி முழுவதையும் கைப்பற்றிக்கொண்ட கரிபால்டி பிரிந்து கிடந்த இத்தாலியின் பல பாகங்களைக் கைப்பற்றி ஒற்றுமைப்பட்ட ஒரே ஆட்சியின்கீழ்க் கொண்டு

எழும் திராவிடம்!

வரவேண்டும் என்ற நோக்கத்தோடு நேப்பிள்ஸ் நகரத்திற்குள் நுழைந்தான். இந்தச் சமயத்தில்தான் கரிபால்டிக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு விக்டர் எமானுவேல் என்ற இத்தாலியின் ஒரு பகுதியை ஆண்ட ஒரே இத்தாலிய இளவரசன், நேப்பிள்ஸ் நகரம் நோக்கிச் சென்றான். ஒரே நோக்கத்தோடு ஒத்துழைக்கும் கரிபால்டி, எமானுவேல் ஆகியவர்களின் முயற்சிக்கு எமானுவேலின் அமைச்சராக பணியாற்றி வந்த கவூர் என்பவன் தனது மூளை பலத்தை தந்துதவினான். அமைச்சன் கவூர் ஒரு சிறந்த அரசியல் அறிஞன்; மாகியவல்லியும் அரிஸ்டாட்டிலும் சேர்ந்து உருவாக்கிய உருவம்தான் கவூர். தனது இளம் வயதிலே இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய இடங்களுக்குச் சென்று அரசியல் அமைப்பு முறைகளையும், அரசாங்க விதிமுறைகளையும் கற்றுத் தெளிவு பெற்றான். தன் நாட்டிற்கும் சிறந்ததொரு அரசியல் அமைப்பு முறையை ஏற்படுத்த, அந்நியர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்கின்ற எண்ணத்திலேதான் விக்டர் எமானுவேலுக்கும் கரிபால்டிக்கும் தனது அரசியல் வித்தைகளைச் சொல்லிக் கொடுத்தான். குறிப்பாக ஆங்கில அரசியல் அமைப்பு முறையை மிகவும் விரும்பியவன் கவூர். ஆங்கிலேயரின் அரசியல் திறமையையும், சட்டத்திற்குட்பட்ட மன்னர் உள்ள ஜனநாயக ஆட்சி முறையையும் பெருமளவு வானளாவப் புகழும் கவூர் அதையே தன் தாய்நாட்டிலே காணவேண்டும் என்று கனவு கண்டான். "இத்தாலியின் பிஸ்மார்க்" என்று அழைக்கப்பட்ட கவூரின் இந்த ஆங்கில அரசியல் மோகம் மாஜினிக்குப் பிடிக்கவில்லை. இத்தாலியில் ஒரு சுதந்தர குடியரசு காணவேண்டும் என்று மாஜினி விரும்பினான். ஆட்சி அமைப்பு முறையில் இருவரும் வேறுபட்ட கருத்துக் கொண்டிருந்தாலும் இத்தாலியின் ஒற்றுமை என்கின்ற தீபத்தை ஏற்றுவதற்குத் தங்களது தனிப்பட்ட கொள்கைகளை ஒதுக்கி விட்டுச் செயலில் இறங்கினர்.

ஜனநாயக முறை அவ்வளவாக வளர்ச்சியடையாத அந்த நாளில் ஒரு நாட்டின் விதியை நிர்ணயிக்க, போர்க்களமே நீதிமன்றமாக இருந்தது. ஓட்டு முறையைவிட வேட்டு முறையின்மூலம் பெறுகின்ற சுதந்தரமே மக்கள் மனத்தில் தேசிய உணர்ச்சி என்கின்ற கனலை ஆக்க வேலைகளிலும் ஈடுபடுத்தும் தன்மை பெற்றது என்று உணர்ந்த அந்த நால்வரும் ஆஸ்திரிய ஆதிக்கத்தை ஒழித்துக்கட்டக் களத்தில் இறங்கினர். வாளையும் சூடினர். அந்நியர்கள் ஆக்ரமிப்பு ஒழித்துக்கட்டப்பட்டது. சுதந்தர இத்தாலி ஏற்படுத்தப்பட்டு அதன் தலைநகரான பெருமை ரோமிற்கு அளிக்கப்பட்டது. எந்தமுயற்சிக்காகப் பாடுபட்டானோ, யாருக்காகத் தன் உடல் பொருள் ஆவி அத்தனையும் ஈந்தானோ, எந்த ஒரு கொள்கைக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தானோ, அந்த உழைப்பின் பயனைத் தன் வாழ்நாளில் காணமுடியாமல மாண்டுபோனான் கவூர். கி. பி. 1861-ம் ஆண்டு ஜூன் மாதம் தன்னுடைய இலட்சியத்தைக் காண வாய்ப்பில்லாமல் வாழ்வை முடித்துக் கொண்டான். ஆனால் கவூரின் ஆசை கி. பி. 1871-ம் ஆண்டு நிறைவேறியது. இருந்தும் ரோமைத் தலைநகராகக் கொண்டு அகில உலகக் கத்தோலிக்கர்களின் தலைவராக இருந்த 'போப்', இத்தாலியக் குடியரசை அங்கீகரிக்க மறுத்துவிட்டார். எனவே அந்நிய ஆதிக்கம் ஒழிந்த பிறகும் ஒற்றுமைப்படுத்தப்பட்ட இத்தாலியின் மன்னனுக்கும் ரோம் நகரத்து போப்பிற்கும் தகராறுகள் அடிக்கடி எழுப்பிக்கொண்டிருந்தன. கி. பி. 1929-ம் ஆண்டு முசோலினிக்கும் போப்பிற்கும் ஏற்பட்ட ஒரு சமாதான ஒப்பந்தத்தின்மூலம் இத்தாலியை ஒரு நாடாகவும் ரோம் அதன் தலைவர் என்றும் போப் அங்கீகரித்து விட்டார். அதற்குப் பதிலாக, சிறிய நகரமான வாட்டிக்கன் பிரதேசத்தை போப்பின் அதிகாரத்திற்கு அளித்துவிட்டது; இத்தாலிய அரசு. இத்தாலியின் ஆட்சியில் தான் தலையிடுவதில்லை என்றும் தனக்கும் மதத்திற்கும்தான் தொடர்பு உள்ளது என்றும் போப் அறிவித்துவிட்டார். சுதந்தர இத்தாலி உருவானது. நால்வர் கண்ட கனவும் நிறைவேறியது.

-மகமது, எம். ஏ.

திணையும் பனையும்

ஓரே ஒரு மணி மட்டும் கீழே கிடக்குமானால் எளிதில் நம் கண்ணுக்குத் தென்படாத அளவு மிகச் சிறியது, திணை. பனை ஒருவகை மரம். வானுற ஓங்கி வளம்பெற வளரும் இந்த மரம் வெகு தொலைவிலிருந்து நோக்குபவர்கட்கும் எளிதில் புலனாகும். சுருக்கமாகக் கூறப்போனால் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ள அளவு வேறுபாடுடைய இரு பொருள்கள். முப்பாலின் மூன்று பகுதிகளிலும் பகுதிக்கு ஒருமுறை இவை இரண்டையும் ஒப்புநோக்கி எடுத்துக் காட்டி அரசியல் உண்மைகளை எளிதாக விளக்குகிறார் திருவள்ளுவர்.

இடுக்கண் வருவது யாருக்கும் இயல்பே. சில வேளைகளில் அவர்களாகவே அதிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளமுடியும். சிலவேளைகளில் பிறரது துணையும் தேவைப்படும். அவ்வேளைகளில் பிறரால் பெறும் உதவியை மறவாமல் மனதிற்கொண்டு, காலமும் வாய்ப்பும் நேரும்பொழுது, அவர்களுக்கும் தம்மாலாஆன உதவியைச் செய்து நன்றிக்கடன் தீர்ப்பதையே 'செய்ந்நன்றி அறிதல்' என்பர் அந்த நன்றிக்கடன் மனிதப் பிறவியின் ஆறுவது அறிவுக்குச் சான்றாக விளங்குவது. 'இடமும் காலமும் அறிந்து ஒருவர் செய்யும் உதவியை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. மறக்கவும் கூடாது. அது இவ்வுலகைவிட மிகப் பெரியதாகும்' என்று கூறும் திருவள்ளுவர், அந்த உதவியினால் கிட்டிய பயனைத் துய்த்தவர்; அதன் அருமை பெருமையை உணர்ந்தவர். அந்த உதவி திணையளவினும் சிறியதாக இருப்பினும், அதைப் பனையளவினும் மிகையாகக் கொண்டு மறவாமல் போற்றுவார்கள் என்று புகல்வதன்மூலம், நாமும் அவ்வாறு இருக்கவேண்டும் எனச் சொல்லாமல் சொல்லுகிறார் அறத்துப்பாலில்.

திணைத்துணை நன்றி
 செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்.

—குறள், 104.

குற்றம் யாரிடத்தும் நிகழ்வது இயல்பே. ஆனால், தான் அறிந்து தவறு செய்யக்கூடாது. 'தன்னையறியாமல் வந்த பிழைக்கு, என்ன செய்ய இயலும் வருந்துவதைத் தவிர ?' என்று கேட்கலாம்! வருந்துகிறேன் என்று வார்த்தையால் கூறிவிட்டு, உடனடியாக அதை மறந்துவிடாமல், உண்மையிலேயே ஒருவர் தன் தவறுக்கு வருந்துவாரானால் அதுவே அவரை மேலும் தவறு செய்யாமல் தடுக்கும். 'வசையொழிய வாழ்வாரே வாழ்வா'ராதலால், தான் இசையொழிய வாழ நேர்ந்தமைக்காக அவர் மனம் அல்லற்படும். அவர் செய்த தவறு திணையளவினும் சிறியதே ஆயினும், அதுவே அவர் அகக்கண்முன் பனையளவினும் பெரிதாக உருவெடுத்து என்றும் அகலாமல் நிலைத்து நிற்பதால், மேலும் தவறிழைக்க அவர் நாணுவார் என்பதே, பொருட்பாலில் திணையையும் பனையையும் துணைக்கழைத்து வள்ளுவர் விளக்கும் உண்மை.

"திணைத்துணையாம் குற்றம்
 வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்';

—குறள், 433.

இனி, அகத்திலும் ஒன்று.

ஊடுதல் காமத்திற்கின்பம்தான். ஆனால் அந்த ஊடல் இன்பம் விளைவிக்காத இடமும் உண்டு. முதலிரவின்கண் கூடி மகிழ்வது இயன்றாலும் ஊடிக் களிப்பது இயலாது. பிரிந்தவர் ஒன்று சேர்ந்த நிலையிலே ஊடல் தோன்றாது; தோன்றக்கூடாது; தோன்றுவதால் இன்பம் விளையாது. இவைமட்டுமல்ல; இவைபோன்ற கூடலின்கண் வேட்கை மிகுந்த இடங்களிலெல்லாம் ஊடல் கேடுதான் தரும். காமம் நிறைந்து புணர்ச்சி விரும்பும் வேளையிலே ஊடுதல் கூடாது-சிறிதளவும் கூடாவே கூடாது-என்று கூறவரும் இடத்திலும் சிறுமை (அளவில்)க்குத் திணையையும் பெருமைக்குப் பனையையும்தான் எடுத்துக் காட்டுகிறார் பொய்யில் புலவர். பனையளவினும் மிகைப்பட்ட காமத்தால் கூடுதலில் நாட்டம் தோன்றும்பொழுது, தலைவனோ தலைவியோ திணையளவிற் குறைந்த அளவிலும்கூட ஊடாதிருக்க வேண்டுமென அன்புக் கட்டளை விடுக்கிறார், நம் புலவர் பெருமகனார்.

'திணைத்துணையும் ஊடாமை
 வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்''

—குறள், 1282.

முப்பாலின் மூன்று பகுதிகளிலும் திணையும் பனையும் இணைந்து காட்டும் இவ்வுண்மைகளை உணர்ந்து கொண்ட தமிழ்ப் புலவர் ஒருவர் வள்ளுவரை, அவரளித்த வளமார் திருக்குறளைப் புகழ விரும்புங்கால் அவரது பாவிலும் பொலிவு மிகத் தோன்றுகின்றது. அதே திணையும் பனையும், ஆனால் புலவர் நாவிற் பொருந்தும் எந்த ஒரு பொருளும் ஏற்றமும் இழிவும் ஏற்கும் என்று விளக்கா நிற்பதேபோல், அப்புலவரின் நோக்கிலே திணை, பனையைவிட உயர்வு பெறுகிறது. தரையிலே முளைத்து உயர்ந்து வளராமல் தரைப் பரப்பிலேயே படர்ந்த வாறிருக்கும் மிகச் சிறிய புல்லின் நுனியிலே ஒட்டிக்கொண்டிருக்கும் திணையளவினும் மிகச் சிறிய பனிநீர்த்துளி, எதிரிலே வானுற ஓங்கி வளர்ந்திருக்கும் பனைமரத்தையும் தன்னுள்ளே அடக்கிக் காட்டும் வல்லமையுடைத்தாக இருப்பதேபோல், இரண்டடியினுங்கூடக் குறுகலாயுள்ள 'குறள்' ஒவ்வொன்றும் இவ்வையத்தையே தன்னுள் அடக்கிக் காட்டுகிறது என்பதே அப்புலவராம் கபிலரின் பொன்மொழி. இதுதான் அவரது வெண்பா.

''திணையளவு போதாச்
 சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும்
 படித்தால்—மனையளகு
வள்ளைக்(கு) உறங்கும்
 வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி''

-பனை. சண்முகம்.

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஜை.ட.சங்குமிள் லிட,ரு,திண்டுக்கல்ரோடு, மதுரை •

உருவகம் :

புத்தகமும் சுவடியும்

அலமாரியிலிருந்த ஏட்டுச்சுவடியும், புத்தகமும் சண்டை பிடித்துக் கொண்டன.

நெடுங்காலமாகத் தான் அங்கு இருப்பதாகவும், இப்போது வீட்டில் வாழ்பவர்களின் முன்னோர் பலர்கூடத் தனக்குத் தெரிந்தவர்கள் என்றும், வீட்டிலிருப்பவர்கள் தன்னைக் கடவுளாக மதித்து வழிபடுவதாகவும் ஏடு கூறியது.

மனித அறிவின் வளர்ச்சிக்குச் சான்றாகத் தான் இருப்பதாகவும், தன்னிடம் அற்புதமான சித்திரங்கள் அடங்கியிருப்பதாகவும், தன்னைப் பிரித்தவுடன் பக்கங்களில் காணப்படும் எழுத்துக் கோர்வையின் அழகில் படிப்பவர்கள் மயங்கி நின்றுவிடுவார்கள் என்றும் சொல்லிற்று, புத்தகம்.

இந்தச் சண்டை பல மாதங்கள் நீடித்திருந்தது. ஒன்றுக்கொன்று, தாமே உயர்ந்தவை என்ற எண்ணத்தை மட்டும் மாற்றிக்கொள்ளவேயில்லை, அவை இரண்டும்.

வயது வந்த வீட்டுப் பையனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது. திருமண நாளும் குறிக்கப்பட்டது. வீட்டின் இடிந்த பகுதிகளைச் செப்பனிட்டு, வெள்ளையடித்து, வண்ணம் பூசி அழகுபடுத்தும் வேலை தொடங்கியது. அலமாரி, பெட்டி, சட்டி, பானை ஆகியவற்றிலிருந்த பொருட்கள் அனைத்தும் வெளியில் எடுக்கப்பட்டு, வீடெங்கும் சிதறிக் கிடந்தன.

அவற்றோடு ஏட்டுச் சுவடியும் புத்தகமும் ஒரு மூலையில் கிடந்தன.

வீட்டுத் தலைவர், தன் மனைவியுடன் வெளி வராந்தாவில் அமர்ந்து, நடக்கப் போகும் திருமணம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

இரண்டாம் வகுப்பில் படிக்கும் இளைய பையன், ஏட்டுச் சுவடிக்கு அருகில் கிடந்த புத்தகத்தை எடுத்து அதிலிருந்த படங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்குப் பின், அவன் அந்தப் புத்தகத்தை சன்னலில் வைத்துவிட்டு விளையாடப் போய் விட்டான்.

சன்னலில் இருந்த புத்தகம், திடீரென்று அடித்த காற்றின் காரணமாக வீட்டுக்கு வெளியில் வந்து விழுந்தது.

புத்தகம் வீதியில் வந்து விழுவதற்கும் பசியோடு அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்த கழுதை ஒன்று அதைப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது. தனக்கு நல்ல உணவு கிடைத்த மகிழ்ச்சியில் புத்தகத்தைச் சுவைத்துச் சுவைத்துத் தின்றது கழுதை.

அதே நேரத்தில், அப்போதுதான் வந்த உறவினர் ஒருவரை வரவேற்றுவிட்டு, அவருக்குக் காப்பி கொண்டு வரும்படி சமையற்காரிக்கு உத்தரவிட்டார் வராந்தாவில் வீற்றிருந்த வீட்டுப் பெரியவர்.

அதுவரை எரிந்துகொண்டிருந்த அடுப்பு, அப்போது தான் அணைந்துவிட்டிருந்தது. திரும்பவும் பற்றவைப்பதற்கு ஈரவிறகு பெருந் தொல்லையாக இருந்தது. வீட்டுப் பெரியவர் அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். சமையற்காரிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. திகைத்தாள்; திணறினாள்; திண்டாடினாள். பக்கத்தில் கிடந்த ஏட்டுச் சுவடியைப் பார்த்ததும் அவளுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அதை எடுத்தாள். அடுப்பில் வைத்தாள். நெருப்புப் பெட்டியை எடுத்துப் பற்ற வைத்தாள். சிறிது நேரத்தில் விருந்தினருக்கு நல்ல காப்பி கிடைத்தது.

தன்னுடைய பசி தீர்ந்த திருப்தி கழுதைக்கு; குறித்த நேரத்தில் காப்பி கொடுத்துவிட்டதால் ஏற்பட்ட நிம்மதி சமையற்காரிக்கு.

— ப. புகழேந்தி

அழைப்பு உங்களுக்கு!

திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்புத்தீயிலே வளர்ந்துவிட்ட விடுதலை இயக்கம் என்ற உண்மையினை இன்றளவும் அரசியலில் நடைப்பிணங்களாக இருக்கின்றவர்களைத் தவிர மற்றவர் உணர்வர். கழகம் மாற்றாரின் கேள்விக்கணைகளைக் கண்டு தயங்கியதில்லை; அரசியல் தரகர்களின் அறைகூவலைக் கேட்டு அஞ்சியதில்லை! அறிந்தோ அறியாமலோ அமைச்சர் சுப்பிரமணியம் என்ற வழக்குக் கிடைக்காத வக்கீல்-வாதிகள் தெரியாத சட்டக்கல்லூரியின் பழைய மாணவர், அண்மையில் தஞ்சைப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களுடன் வாதிடத் தயார் எனத் தெரிவித்தாராம்.

ஆனால் அது தவறான செய்தி என்று மறுக்கப்பட்டுள்ளது. மறுத்தவர் அமைச்சர் சுப்பிரமணியமல்ல; மாணவர் காங்கிரஸ் தோழர் ஒருவரே மறுத்திருக்கிறார். அது அமைச்சர் சார்பில் விடுக்கப்பட்ட செய்தியாயுமிருக்கலாம்; இல்லாமலுமிருக்கலாம்! அமைச்சர் விவாத அரங்குக்கே அழைத்தார் என்றே வைத்துக் கொள்வோம்! அந்த அரங்கிலே கேட்கக்கூடிய கேள்விகள் சிலவற்றை வைத்திருக்கிறோம். விவாத அரங்குக்கழைக்கும் அமைச்சர், இதற்குப் பதில் சொல்லட்டும்!

இவருடைய கடந்த காலப் பேச்சுக்களையும், தடுமாற்றங்களையும், தடுமாற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்டு மண்டியிட்ட நிகழ்ச்சிகளையும் மறந்துவிடாதவர்களுக்கு கேலிச் சிரிப்புத்தான் இதழோரத்தில் ஒளிவிடும்! புதிய கல்வித்திட்டம் இந்த உலகத்திற்கே வழிகாட்டி - வாழ்வுயர்த்தும் திட்டம் என்றெல்லாம் பேசிவந்த நேரத்தில், ஆச்சாரியாருக்கு ஆதரவு தேடி நாடு சுற்றிய நாட்களில் கல்வித்துறை அறிஞர்களுக்கெல்லாம் அவசர அவசரமாக அழைப்பு அனுப்பினார்; அறைகூவலைக் கூச்சலாக்கிக் காட்டினார்! சென்னைத் திருவள்ளுவர் கழகத்தார் இவரையும் இவரின் ஆசான் ராசகோபாலாச்சாரியாரையும் அறிஞர் அண்ணா அவர்களுடன் வாதிட அழைத்தபோது அந்தத் திசையைக் கூட திரும்பிப்பார்க்காமல் மந்திரி சபை மாளிகைக்குள் ஓடி மறைந்துவிட்டார். "தேவிகுளம் பீர்மேடு இணைப்பில் டில்லி சர்க்கார் தவறு செய்யவில்லை; சரித்திர - நிலநூல் முறைப்படி சரியாகவே நடைபெற்றுள்ளது. இதனை என்னிடம் வாதாடி நிரூபித்து மறுத்துவிட்டால் நான் பதவியை விட்டு விலகுவேன்" என்று திமிர் பேசினார். ஆனால் கூட்டணியார் தந்த ஆதாரங்களையும், பொதுவேலை நிறுத்த எழுச்சியையும் கண்டபின்பும்கூடத் தன் பதவியை விட்டுவிடத் தயாராகவில்லை! தட்சிணப்பிரதேசம் என்ற திட்டம் இந்தியத் துணைக்கண்டத்திற்கே ஒற்றுமைப் பண்பை வளர்க்கும் என்று நெஞ்சறியப் பொய் கூறிச் சுற்றினார் எதிர்த்தவர்களை ஏசினார்; எவர் சொன்னாலும் முன்வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன் என்று அகம்பாவக் குரல் கொடுத்தார், ஆனால் கனம் காமராசர் "மந்திரிப் பதவியா? தட்சிணப்பிரதேசமா? எது வேண்டும்?" எனக் கேட்ட வேளையில் அவரின் காலடியில் சரணடைந்து சொரணையற்றவராகக் காட்சிதந்துத் தன் சவால் உரைகளைச் சாகடித்துக் கொண்டார்! "இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டுக்கு இரண்டாயிரம் கோடி நிதி தரப்பட்டால அதற்கான திட்டத்தை அண்ணாதுரை அவர்கள் தயாரித்துக் கொடுக்கமுடியுமா. அதனை வெளிநாட்டு நிபுணர்கள் சிறந்ததென ஒப்புக்கொண்டால் நான் பதவியை விட்டு விலகுவேன்" என்றார். "திட்டம் தந்தால் அந்த நிதியைப் பெற நிதி அமைச்சருக்குத் துணிவுண்டா? அதற்கான அதிகாரம் உண்டா? அதனை முதலில் தெரிவியுங்கள்?" எனக் கேட்ட நேரத்தில் இந்த அமைச்சர்தான் கோட்டைக்குள்ளே புகுந்துவிட்டார்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றத்தலைவர் அறிஞர்அண்ணா அவர்கள் கட்டாய இந்தித் திணிப்பை ஆதரித்துக் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டார். இப்போது இல்லையென மறுக்கிறார். என்னிடம் உள்ள சான்றுகளை ஒரு உயர்நீதி மன்றத்து நீதிபதியவர்கள் பார்வையிட்டுச் சரியெனச் சொல்லிவிட்டால் அண்ணாத்துரை அரசியலைவிட்டு விலகவேண்டும். இல்லையென்றால் நான் அமைச்சர் பதவியிலிருந்து மட்டுமல்ல-அரசியலிலிருந்தும் விலகிக்கொள்வேன்' என்று ஊரெங்கும் சென்று பெரும் பொய்யைச் சொன்னார். நீதிபதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தாரா? வளைவில்லாத அவரது முதுகெலும்பிலே உறுதியிருந்ததா? அல்லது வளைகின்ற நாவில்தான் வலுவிருந்ததா? இரண்டுமில்லாத மதி-நிதியெனும் இரட்டை நாயணக்காரர் சட்டமன்றத்திலே, தான் சொன்னதெல்லாம் தவறு எனச்சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இடைமறித்த அனந்தநாயகி அம்மையாரைக்கூட அமரச் செய்தார்! அறிஞர் அண்ணாவுக்கு விடுத்த அறைகூவலைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்! அதே அமைச்சர், அதே உருவம், அதே நாக்குத்தான் மீண்டும் அண்ணா அவர்களை அழைத்துள்ளது, அருகதையுண்டா என்பதனை எண்ணிப் பாராமல்! அறிஞர் அண்ணா அவர்களுடன் ஒரே மேடையில் சென்னை வைத்தியக் கல்லூரியில் பேசியபோது இவர் பட்டபாடு என்ன? மாணவர் தந்த தீர்ப்பு என்ன? மதியிருந்தும்கூட மந்திரியார் மறந்துவிட்டாரா? சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் அளித்துள்ள அறிவுரைகளையும் அறவுரைகளையும் அமைச்சர் என்றைக்காவது மறுக்க முன்வந்ததுண்டா? அண்ணா ஒன்பது குற்றச்சாட்டுக்களைச் சொல்லிருந்தால் ஒன்றுக்குப் பதில் கூறவே ஒன்றரைமணி நேரம் வேண்டுமே இவருக்கு! இவரா அறைகூவல் விடுப்பது? அதுவும் தஞ்சையிலே! அறிஞர் அண்ணாவின் கருத்துக்களை மறுக்கவேண்டும் மறுத்துவிடமுடியும் என்ற ஆணவமும் அதிகார போதையும் இருக்குமானால் அதற்கென ஒரு மேடையா வேண்டும்? கையிலே வைத்துள்ள பேனாவை எடுத்துக் கருத்துக்களை வாரி இரைத்திருக்கக்கூடாதா? அமைச்சரைப் பற்றிய எத்தனையோ செய்திகளை அறிஞர் அண்ணா அவர்களின் அழகுமிளிரும் ஆங்கிலக் கட்டுரைகளில் "ஹோம் லாண்ட்" இதழ்களில் காணமுடியும்! அமைச்சருக்குத் தன் அறிவுத்திறமையிலே அவநம்பிக்கையில்லையென்றால் அறைகூவல் விடுத்த வேகத்தில் அவைகளுக்கெல்லாம் தக்க மறுப்புரைகளைத் தரட்டும் - தரங்கெட்டுப் போனவர்கள் யார்-தகாத வாய்வீரம் காட்டியது யார், தவறி விழுந்துவிட்டவர்கள் யார் யார் என்பதை நாடறிய முடியும்? நாடாளும் வாய்ப்பை இழக்கும் முன்னே அமைச்சர்இதனைச் செய்வாரா?

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறைகூவலை அனுப்பி தப்பிப் பிழைத்தவர்கள் எவருமில்லை! அதுவும் அறிஞர் அண்ணா அவர்களுடன் மோதிப் பல்லுடைந்தும், இடுப்பொடிந்தும், கால் முறிந்தும் போனவர்கள்பட்டியலிலே செங்கல்வராயர்கள், சிவஞானங்கள், சீவானந்தங்கள், கிருபானந்தவாரியார்கள், திருமலைச்சாமிகள் ஆகிய இவர்களும் இன்னும் பல பெரும் புலவர்களும் இடம் பெற்றுள்ளனர்! பதினைந்தாண்டு 'திராவிட நாடு' இதழ்களைப் படித்துப்பார்த்தால் பழைய பாடமும் பால பாடமும் தெரிந்திராத அமைச்சர்கள் அண்ணா அவர்களை அழைத்திருக்கமாட்டார்கள்! அமைச்சருடைய அறைகூவலை அஞ்சா நெஞ்சுடையார் அழைப்பென நம்பியிருக்கும் சில தேசீயத் திருவாளர்கள் அண்ணா அறைகூவலை ஏற்றுக் கொள்ளவில்லையெனத் தோள் தட்டுகிறார்கள். கிழக்குமேற்காகக் கைகளையும், வடக்கு தெற்காகக் கால்களையும் நீட்டித் தமிழகத்து அரசியலில் இடம் தேடுகின்ற சொக்கலிங்கம் கூட அமைச்சரைக் கொண்டு சொக்கட்டானாடுகிறார்! தலையை முன்னேற்றக் கழகத்திலும் உடலை திராவிடர் கழகத்திலேயும் வைத்திருக்கும் வௌவால் பத்திரிகை கூட இந்தச் சங்கடத்தில் சிக்கிக்கொண்டு காங்கிரஸ்காரனுக்குப் பதில் சொல்லமுடியவில்லையே எனக் கண்ணீர் வடித்துக்கொண்டுள்ளது! 'தனி அரசு' ஆசிரியர் ஜூலை 15-ம் நாளுக்குள் நாளும் காலமும் இடமும் அறிவிக்க வேண்டுமென அமைச்சரைக் கேட்டிருந்தார்! வீரம் பேசிய விவேகிதானே விவாதத்திற்கு ஆவன செய்ய வேண்டும்? ஆசைத்தம்பிக்குக் கேட்க உரிமையுண்டு கழகத்தின் சார்பிலே! சென்னை இளைஞர் காங்கிரசார் அமைச்சருக்கு, வேண்டுகோள் விடுத்தனரே! கொங்கு நாட்டார் கொடுத்த பதில் என்ன? இதற்கு முன்னாலே பலமுறை கொடுத்த அவலப் பேச்சுக்களிலே இதுவும் ஒன்றென எண்ணி அதனை அமைச்சர் அன்றே மறந்திருப்பார். ஆனால் அவரின் அருமைச் சீடர்கள்தான் அலறித் துடிக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் ஒன்று சொல்வோம் உங்களுடைய அமைச்சர் சுப்பிரமணியம் மட்டுமல்ல; மந்திரி சபையிலேயிருக்கும் எல்லா நபர்களுக்கும் சில தலைப்புகளைத் தருகிறோம். தமிழிலே பேசிக் கருத்துக்களைத் தர வேண்டாம். விருப்பம் போல் காலத்தை எடுத்துக்கொண்டு, இதுவரையில் எவரும் சொல்லாத கருத்துக்களை, மற்றவர்களிடமிருந்து திருடிக்கொள்ளாத சொந்தக் கருத்துக்களை எழுதி அனுப்பி வைக்கட்டும் - வரவேற்கிறோம், நாங்கள். அண்ணா அவர்களுக்கு அறைகூவல் விடுகின்ற அப்பாவிகளைப் பார்த்து அவர் சிரிப்பார். விவாதிக்க விரைந்து வாரீர் என அவர் தம் நிலை உணராமல் என் தம்பிகள் அழைக்கின்றனரே என்றும் வருந்திடுவார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தவர் வெட்கத்தால் தலை கவிழும் வண்ணம் "காலம் என்னும் மணற்பரப்பு" என்னும் பொருள்பற்றி கையெழுத்தில் எட்டுப் பக்கம் எழுதிட மதிமந்திரி சுப்பிரமணியம் தயாரா? "தலைவணங்காத் தென்பாண்டி நாடு" என்ற தலைப்பில் விரிவுரையும் விளக்கவுரையும் தருவதற்கு விருதை வீரர் வருகிறாரா? 'சிரிப்பு' எனும் தொடரில் சிந்தையள்ளும் சொல்லோவியம் தர மாணிக்கவேலர் மனம் ஒப்புவாரா? "தத்துவ வரலாறு" எழுதித் தருவதற்கு டார்வின் தத்துவத்திற்கொரு மூலஆதாரமாகத் திகழும் பக்தவத்சலம் பயமின்றி முன்வருகிறாரா? "ஏன்? எப்படி? எதற்காக?" — என்பதனை விளக்க அமைச்சர் வெங்கட்டராமனின் இசைவுண்டா? 'நேற்று-இன்று-நாளை"-அமைச்சர் இராமய்யாவுக்கு இவைகளை இணைக்கத் தெரியுமா? "பொருள்" என்னும் பொருள்பற்றிப் பேசவும் எழுதவும் எல்லாம்வல்லகக்கன் சம்மதம் தருவாரா? "மந்திரிக்கழகு ஊர்சுற்றல்"-இதனை மறுத்துக் காட்ட மா(தா)மேதைலூர்து அம்மாள் அவர்கள் தரப் போகின்ற காரணங்கள் என்ன? அறிஞர் அண்ணா அவர்களுக்கு அழைப்பு விடுக்கத் தகுதியுண்டா எனும் சந்தேகம் தெளிவதற்கே இது போன்ற அன்பழைப்பு! நிதி அமைச்சரும் கல்வி அமைச்சரும் மட்டுமல்ல — அமைச்சர்கள் பட்டாளங்களையே அழைக்கிறோம்! வருக! வருகவே! இது எங்களுடைய மாற்றார் அனைவருக்கும் கூடப் பொருந்தக் கூடியதுதான்! நாசஇலக்கியம், நல்ல இலக்கியம், நசிவு இலக்கியம் எனப் பிரித்துப் பார்க்கும் மூளையில் கசிவுள்ள மேதைகளுக்கும் இந்தக் கேள்விக் கணைகள் உரித்தாகும்! அறிஞரா? நாவலரா? கவிஞரா? கலைஞரா? சிந்தனைச் சிற்பிகளா? சொல்லின் செல்வர்களா? என்றெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்ததவரைப் பற்றிப் பேசும் எதிர்ப்பு அணியினர் எல்லோருமே இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம்! அம்பலத்தில் ஆடி ஆர்ப்பரித்துவிட்டு அறைக்குள்ளே சென்று அடங்கிவிடுவோரை நாடு தெரிந்துகொள்ள நல்லதோர் வாய்ப்பினைத் தரலாம் என எண்ணுகிறேன்! 'தென்றல்' பண்ணிசைத்தது போலவே "பொத்தல் கலயங்காள்! போயொழிவீர்! நில்லாதீர்! மாபெரிய கலை எங்கள் மடிதனிலே! தேனூறும் செந்தமிழின் திறமெல்லாம் எங்கள் திறம்! நாமறிந்த பொருளெல்லாம் நாடறியும்! சொல்கின்றோம்! "மூச்சுவிடு முன்னே முந்நூறு" பாட்டெழுதிக் கூச்சலிடும் உங்கள் கூடுகளில் விட்டெறிவோம்! அவையொன்றைக் கூட்டுங்கள். அறிவுடையார் வாருங்கள்! கழகத்தார் பெருமையினை நீரறிவீர்! வெத்துவேட்டெத்தனை நாள்! வீணாகிப் போகாதீர்! திருந்தித்தமிழ்த் தாயை. திராவிடத்தை வாழ வைப்பீர்!" என விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்—எங்கள் திறன் காண வாரீரே!

—கூடலரசன்.

வருகிறீரா? வணங்குகிறீரா?

To ஆசிரியர் தென்றல் சென்னை-1 தமிழ்நாடு

ஐயம் அகற்று!

கண்ணதாசன் பதில் தருகிறார்.

முத்துமணி, திருச்சூர்.

"சிவகெங்கைச் சீமை"யில் ஓரிடத்தில் "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!" என்னும் வாழ்த்து மொழியைக் கையாண்டுள்ளீர்கள். அந்தப் பதினாறு யாவை? "உருவளர் வயது, பூமி" என்று துவங்கி, "ஈரெட்டும் பெற்று நீர் வாழி! வாழி!" என்று முடிவுறும் பாடலின் கருத்துத்தானா? விளக்குக!

பேறுகள் பதினாறு. செல்வப்பேறு, மக்கட்பேறு என வாழ்வுடன் ஒட்டிய இன்றியமையாத நிலைகள் பதினாறென வகுக்கப்பட்டுள்ளன. சாதாரணமாகக் கிராமத்து வழக்கில் இந்தப் பதினாறும் குழந்தைகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

★

கே. கே. சாமி, விருத்தாசலம்.

தமிழைக் காப்பவர்கள்—வடமொழிச் சொல்லை வெறுப்பவர்கள்—தன்மான உணர்ச்சி உள்ளவர்கள், "திராவிடம்" என்ற சொல்லை அகற்றாமலிருப்பதேன்?

திராவிடம் என்பது தமிழ்ச் சொல்லேயென மொழிநூலார் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் பழைய "தென்றல்" இதழில் எழுதியுள்ளார்கள். சொல்லாராய்ச்சியை பொறுத்த வரையில் அவர் முடிபுகளே முடிந்த முடிபுகள் எனக் கருதுபவன் நான்.

★

இரா. கந்தசாமி,
கீழநிலிதநல்லூர்.

ஐயம் வேறு; வினா வேறு. "ஐயம் அகற்று" என்ற பகுதியில் கேட்கப்படுவனவெல்லாம் வினாக்கள். எனவே இப்பகுதிக்கிட்ட பெயர் தவறு?

ஐயத்தின் குழந்தை வினா! வினாவுக்குத் தரப்படும் பதில் வினாவை அகற்றவில்லை; ஐயத்தைத்தான் அகற்றுகிறது.

★

ஏ. என். முகமது, சென்னை-2.

திருக்குறள்—பரிமேலழகர் விளக்கவுரை, என்போன்றவர்களுக்குப் புரியவில்லை. வழி என்ன?

கழக வெளியீடான டாக்டர் மு. வரதராசனார் உரையைப் படிக்கலாம்.

★

செங்குட்டுவன், தூரம்பட்டி.

"உதயசூரியன்" என்ற வடசொல்லை எடுத்துவிட்டு, "எழுஞாயிறு" என்ற தமிழ்ச்சொல்லை உபயோகிப்பீரா?

தேர்தல்களைப் பொறுத்தவரை, அது அரசினரால் பயன்படுத்தப்படும் சொல். அதை நாமாக மாற்றினால் தேர்தல் குறியீடுகளில் குழப்பம் வரும். அரசினரே அச்சொல்லைப் பயன்படுத்தும்படி, தூண்டலாம். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூறு தமிழர்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களைக் கற்றுத் தருவதற்கே இன்னும் இரண்டு தலைமுறைகளாகும். வடமொழி அவ்வளவு காலமாகத் தமிழகத்திற்குள் குழப்பம் விளைவித்திருக்கிறது.

★

கி. ரா. ராசியப்பன்,
கவுண்டன்புதூர்.

பாடல்கள் எழுதும் மருதகாசி என்பவர் "எழுதிச் செல்லும் விதியின் கை!" என்று துவங்கும் தேசிகவினாயகம் பிள்ளையின் மொழிபெயர்ப்புப் பாடலையும், "முத்துவீராயி" என்ற கிராமியப் பாடலையும் திருடித் தன் பெயர் போட்டு வெளியிட்டிருக்கிறாரே—இது சரியா?

திருக்குறள் வார்த்தைகள் அப்படியே சிலப்பதிகாரத்தில் வருகின்றன; அப்படியே மணிமேகலையில் வருகின்றன; அப்படியே இராமகாதையில் வருகின்றன. இதற்கு இலக்கியத்தில் "எடுத்தாளல்" என்று பெயருண்டு. மூலஆசிரியன் பெயரைச் சொல்லாமலேயே எடுத்தாளலாம் என்பது விதி. ஆனால் முழுப்பாட்டும் மற்றவர் பாட்டாக இருப்பது திருட்டாகும். நீங்கள் குறித்துள்ள பாடல்களில் சில சில வரிகளைத்தான் மருதகாசி எடுத்தாண்டுள்ளார்.

★

இரா. தர்மராசன், தஞ்சை.

காலணா அளவும் கலையறியாதவர்கள் கலைவிமர்சனம் செய்கிறார்கள்; கலைக்கூடங்களுக்குள்ளேயும் புகுந்து விடுகிறார்கள். கலையே களங்கம் நிறைந்ததுதானோ?

கழுதைகளும் குளிப்பதாலே, ஆறு களங்கப்படுவதில்லை!

★

வி. கந்தசாமி, சண்முகம்,
சுப்புராசு, ஈரோடு.

இந்திரா நேருவுக்கு மணமாகி விட்டதா? கணவன் பெயர்? எங்கிருக்கிறார்? குழந்தைகள் உண்டா?

ஆகிவிட்டது. கணவர் பெயர் பெரோஸ் காந்தி. அவர் ஒரு எம். பி., டில்லியில் இருக்கிறார், இரண்டு ஆண் குழந்தைகள் இருக்கின்றனர்.

ஜி. துளசி, இராயபுரம்.

"சிவகெங்கைச் சீமை"யில் வெள்ளையர் பேச்சு தமிழில் மொழிபெயர்க்கப்படுகிறது, தமிழர் பேச்சு மொழிபெயர்க்கப் படவில்லையே ஏன்?

20-6-'59 நாளிட்ட "தென்றலை"ப் படிக்கவும்.

★

சாம்பு நடனமணி, சென்னை.

பசும்பால், பசுப்பால்—இவற்றில் எது சரி?

பசும்பால் என்பதே சரி.

சுவற்றில், சுவரில் — இவ்விரண்டில் எது சரி?

சுவர் என்னும் சொல்லடியாகப் பிறப்பதால் "சுவரில்" என்பது தான் சரி.

★

சு. கி. மூர்த்தி, விழுப்புரம்.

எனக்கொரு தமிழ்ப் பெயர் நீங்கள் வைக்க வேண்டும்!

பாரி!

★

ப. இராமு, வளவனூர்.

புதுவைத் தேர்தலில் தி. க. கலந்துகொள்ளுமா? புரட்சிக் கவிஞர் எதன் சார்பில் நிற்கின்றார்?

தனது ஐந்து எதிரிகளில் ஒரு எதிரியாய்த் தேர்தலைக் கருதுகிறார் பெரியார். புரட்சிக் கவிஞர் எப்பொழுதும்போல் தன் சார்பிலேயே நிற்கிறார்.

★

இரா. மூர்த்தி, சிவகிரிப்பட்டி.

பண்டைக் காலத்து மந்திரிகளுக்கும் இப்போதுள்ள மந்திரிகளுக்கும் உள்ள பேதம் என்ன?

பண்டைக்காலத்து மந்திரிகள் பணி செய்து பொருள் பெற்றார்கள். இந்தக் காலத்து மந்திரிகள் பொருள் பெறுவதையே பணியாய்க் கொண்டிருக்கிறார்கள்!

★

ஏ. பி இராசன்,
வெங்கட்டாபுரம்.

"வடவாரிய மன்னர்களைச் சேரன் செங்குட்டுவன் வென்று கல்லேற்றிக் கொண்டு வந்தது சரியான வீரமன்று!" என "சுதேசமித்திரன்" ஏடு எழுதியிருக்கிறதே- தங்கள் கருத்து என்ன?

கோட்டையிலிருந்து ஓடி, காட்டுக்குள்ளே பிடிபடுவதை வீரமென்று சிலர் கூறும்போது, செங்குட்டுவன் செயலுக்கு இன்னும் பெரிய பெயர் வேண்டும் என்று அந்த ஏடு கருதியிருக்கலாம்.

★

பால. செவந்தி அரசன்,
சென்னை-28.

பாண்டியன் என்ற சிறப்புப் பெயரைத் தமிழகத்தில் நாடார்களும் தேவர்களும் அதிகமாக வைத்திருப்பதன் காரணம் விளக்குக.

பாண்டிய நாட்டின் பழம் பெருங்குடிகளில் முக்கியமானவர்கள் இவ்விருவர். பாண்டிய மன்னர்களோடு இவ்விரு வகையினரே அதிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். கலப்பற்ற தனித்தமிழினத்திற்கு இவ்விரு வகையினரின் தோற்றமும் நடையுடையும் சான்று கூறுகின்றன. சேர நாட்டிலோ, சோழநாட்டிலோ, சேரன், சோழன் என்று பெயர் வைத்துக்கொள்வோர் இல்லை. காவிரிக்கரையோரங்களில் வாழும் ஒரு பிரிவினர் சோழகர் எனச் சாதிப் பெயர் வைத்திருக்கிறார்கள். இது சோழ மன்னர்களை நினைவுபடுத்துவதாகத் தோன்றவில்லை. ஆனால் பாண்டியன் என்ற சிறப்புப் பெயர் பக்தியுடனேயே சூட்டிக்கொள்ளப்படுகிறது, இராமநாதபுரம், மதுரை, நெல்லை மாவட்டங்களில்.

★

மூ. சங்ககாலன்,
தில்லைநடராசபுரம்

ஆகாசவாணி போராட்டம் நடத்தும் திராவிட முன்னேற்றக் கழகம், எட்டாம் வகுப்புக்கு இந்தி கட்டாய பாடமாகக் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து ஏன் போராடவில்லை?

பொதுவாகவே இந்தியை எதிர்த்துப் பொதுக்குழு தீர்மானம் போட்டிருக்கிறது. ஏன் என்னும் கேள்விக்கிடமில்லை. எப்போது என்று கேளுங்கள்!

★

பாடப் புத்தக மோசடி:

"கல்கி"யின் கருத்து

சென்னை நகராட்சி மன்றத்தில் ஒரு புதிய குழப்பம் தோன்றியிருக்கிறது. சமீபத்தியத் தேர்தலுக்கு முந்தியிருந்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நகராட்சி மன்றப் பள்ளிக்கூட நான்காவது வகுப்புப் பிள்ளைகளுக்குச் சில குறிப்பிட்ட புத்தகங்களைப் பாடமாக வைக்கும்படி சிபாரிசு செய்துவிட்டுச் சென்றனர். இப்பொழுது புதிதாக நகர மன்றத்துக்குள் பிரவேசித்துள்ள தி. மு. க. அங்கத்தினர்கள் பழைய சிபாரிசை ரத்துச் செய்துவிட்டனர். இதற்குக்காரணம் என்னவென்று விசாரித்ததில் திடுக்கிடும்படியான விவரம் தெரிய வந்திருக்கிறது.

முந்தையக் கல்விக்குழுவினர், புத்தகத்தைக் கண்ணால்கூடப் பாராமல், சர்க்கார் பாட புத்தகக் கமிட்டியின் அங்கீகாரம் கூடப் பெறாத புத்தகங்களை அவசர அவசரமாக, அவர்கள் பதவியை விட்டு விலகும் நாளன்று இரவு ஒன்பது மணிக்கு முடிவு செய்து வீட்டுச் சென்றிருக்கின்றனர். புத்தகம் அச்சாகி, அது சர்க்கார் பாடப் புத்தகக் கமிட்டி அங்கீகரித்து, அங்கீகரித்த புத்தகங்கள் கெஜட்டில் வெளியான பிறகு அவற்றிலிருந்து சென்னை நகர சபைக் கல்விக் குழுவினர் தேர்ந்தெடுப்பார்கள். இந்த ஒழுங்கு முறையை அப்படியே காற்றில் பறக்க விட்டுவிட்டு, பழைய கல்விக் குழு அதிக்கிரமமாக நடந்துகொண்டிருக்கிறது.

இந்த ஒழுங்கீனத்தைக் கண்டுபிடித்து, துணிச்சலுடன் பழைய முடிவை ரத்துச் செய்ததற்கு இப்போதையக் கல்விக் குழுவையும் நகர சபையையும் பாராட்ட வேண்டும்.

—26-7-'59 "கல்கி"

சிரிப்புத்தான் வருகுதையா!

கேரளத்தில் எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து நடத்துகின்ற கூத்து உச்சக்கட்டத்தையடைந்திருக்கிறது. வெளி மாநிலங்களிலெல்லாம் இரு பகுதியினரும் ஆதரவு திரட்டி வருகிறார்கள். பொதுவுடைமைத் தோழர்களுக்கு இது பெரிய தலையிடிதான். காலப்போக்கையறியாமல் செத்துப்போன சித்தாந்தங்களைக் கட்டிக்கொண்டு மாரடிப்பதால்தான் இந்த வம்பு. மாநிலங்களில் மத்திய அரசின் குறுக்கீடு அதிகம் என்பது புரிகிறது. பிரிந்துபோவதைச் சித்தாந்தம் தடுக்கிறது. உருப்படுவதற்கு வழியா இது? பெருமுதலாளிகள் அதிகமில்லாத நாடுகளில் பொதுவுடைமைத் தோழர்கள் வெற்றிபெற வேண்டுமானால் இன அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும்தான் வேலை செய்தாகவேண்டும். தென்னாட்டின் கண்கண்ட நிலையை, திராவிட இனத்தின் பிரிவினையைத் தவிர வேறு எதைப் போதிப்பவர்களும் செம்மையான வெற்றியைப் பெறமுடியாது. முழுக்க முழுக்கப் பழைய பாதையை விட்டுப் பொதுவுடைமைத் தோழர்கள் வெளியேற வேண்டும். இல்லையென்றால், திருப்பதியோ? பழனியோ? திருவண்ணாமலையோ? குன்றக்குடியோ? மொட்டையடித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

∴

சுதந்திரக் கேரளம் கேட்கும்படி, கேரள தி. மு. க. தீர்மானம் போட்டதல்லவா! அது "திராவிட நாடு" கொள்கைக்கு விரோதமானதென்கிறார், தோழர் சாம்பிராணியார். அவருக்கு மீண்டும் கழகத்தின் அடிப்படைக் கொள்கையைச் சொல்லிவைப்போம். தனித் தமிழ்நாடு, தனி ஆந்திரநாடு, தனிக் கேரளநாடு, தனிக் கர்நாடகம்—இவை நான்கும் இணைந்திருக்கும் திராவிடக் கூட்டாட்சியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. இதைச் சொல்லிக்கொண்டேதான் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது. புரிந்துகொள்வதேயில்லையென்று கங்கணம் கட்டிக்கொண்டு நிலைமைகளை ஆராயப் புறப்படுகிறார்கள் சிலர். அவர்களின் தலைவர் சிவஞானம். நாய் வாலை நிமிர்த்த முடியாதென்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மைவயிற்றெரிச்சல்காரனைத் திருத்த முடியாதென்பது.

∴

திருமங்கலம் தீவட்டி கொழுந்துவிட்டெரிகிறது. திரும்பிய பக்கமெலாம் கழகத்தின் கொடி தெரிவதால், கனவிலேயும் கழகம் அவரைப் பயமுறுத்துகிறது. முதலமைச்சருக்கு "நான் இளைத்தவன் அல்ல" என்பதை அடிக்கடி காட்டிக்கொள்கிறார். நாமென்ன செய்வது? நாம் எந்தப் பாபமும் புரியவில்லை. சில தாய்மார்கள் செய்த பாவம் - இப்படிச் சில பிராணிகள் தமிழகத்தில் பிறந்திருக்கின்றன. அதிகாரம் கையிலில்லையென்றால், சிலருக்கு மாடு மேய்ப்பதைத் தவிர வேறு வேலை தெரியாது. அவர்களிலே நடுநாயகம் திருமங்கலத்தார்! அவருக்கு விளக்கமாகப் பதில் சொல்வது தேவையற்றதென்றே சுருக்கமாகப் பதில் சொல்லியுள்ளேன்.

—கண்ணதாசன்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

மாநாடு

ஆகஸ்ட் திங்களில் சென்னையில கூடுகிறது

★

திராவிட மாணவர்களே!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் மேலும் பணியாற்ற வேண்டிய கட்டம். நாடெங்கும் பணிபுரிய வேண்டிய மகத்தான பொறுப்பு உங்கள் முன்னே உள்ளது. அதற்கு வேண்டிய தீரமும் திறமையும் உங்களிடையே ஏராளம்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பணிகளை விரிவுபடுத்த மாநாடு ஒன்று சென்னையிலேயே ஆகஸ்டு திங்களில் கூட இருக்கின்றது. அதற்கான வரவேற்புக் குழுவை அமைப்பதற்கான கூட்டம் சென்னை பிராட்வேயிலுள்ள சென்டினரி ஹாலில் (36, பிராட்வே நெடுஞ்சாலை—சென்னை பல்கலைக்கழக மாணவர் விடுதிக்கு எதிரிலுள்ள கட்டடம்) 1-8-59 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பணியில் அன்புகொண்டோர்– அக்கறையுடையோர், அமைப்புக் குழு உறுப்பினர்கள், மாணவர் கழகச் செயலாளர்கள் அனைவரும் வரவேற்புக் குழுக் கூட்டத்திற்கு வருகை தருமாறு அன்பு கலந்து வேண்டிக்கொள்ளுகிறேன்.

கிளைக் கழகம் இல்லாத இடங்களில் கல்லூரிகள் மட்டுமல்ல—உயர்நிலைப் பள்ளிகள், தொழிற் கல்லூரிகள் (சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, தமிழ்க் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி போன்றவைகள்) தங்கள் பிரதிநிதியை அனுப்பி வைக்க வேண்டுகின்றேன்.

திராவிட மாணவர்களே நாட்டு மக்களின் முதல் வரிசையினர்!

அந்தப் பெயருக்கேற்ற வெற்றியை நிரூபிக்கத் தவறாதீர்!!

மாநாட்டின் வரவேற்புக் குழுவை வெற்றியாக்கிக் காட்டுவீர்!

மாணவர் முயற்சிக்குப் பொலிவைக் கூட்டிக் காட்டுவீர்!

அன்பன்,

டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

தமிழனாகப் பிறக்க வேண்டும்!

சங்கத்தில் முழங்கிட்ட காலந் தொட்டு
தரணியிலே எழுந்திட்ட நூல்கள் தம்மை
தங்கத்தில் பொறிக்காத காரணத்தால்
தாமறிய முடிவதில்லை என்ற போதும்
சிங்கத்தை வென்றுவிடும் சிறந்த வீரர்
சீருடனே வாழ்ந்திடுவர் என்ப தெல்லாம்
மங்காத எண்ணங்கள் அமைந்த தாலே
மறக்காது தமிழனாகப் பிறக்க வேண்டும்!

தொல்காப்பியன் தந்திட்ட இலக்கணத்தில்
துறையெல்லாம அறியவேண்டும் என்பதாலும்
செல்வத்தில் பிறந்திட்ட இளங்கோ அன்று
சிறப்புடைய சிலம்பினையே தந்ததாலும்
இல்லத்தைக் கவிபாடச் செய்த புலவர்
இயற்றிட்ட தமிழ்ச்சொல்லை அறிவதற்கும்
பல்புகழும் அவரினத்தைச் சார்வ தாலும்
பாரினிலே தமிழனாகப் பிறக்க வேண்டும்!

அகமெல்லாம் ஆசைகொண்டு அணைப்பதற்கே
அமைந்திட்ட தமிழ்நாட்டு நங்கையர்கள்
அகம்மாறிப் பொருள்தேடச் சென்று விட்டார்
அடங்காத சினத்தினாலே ஊடல் கொண்டு
முகத்தினையே காட்டாது இருந்து விட்டால்
முயற்சியுடன் இரவெல்லாம் கண்விழித்து
சுகம்காண உடல்தொட்டு ஊடல் போக்கும்
சுவையாயும் தமிழனாகப் பிறக்க வேண்டும்!

--"தமிழ் அமுதன்"

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

சிறப்பிதழ்

தமிழ்கூறு நல்லுலகம் வியந்தேத்தும் பேராசிரியர் பசுமலை நாவலர் டாக்டர் ச. சோமசுந்தரப் பாரதியார் அவர்களது எண்பதாவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடக்க இருக்கிறது. மதுரையில் தமிழகப் புலவர் அனைவரும் திரண்டு அவரை வாழ்த்துகின்றனர். "தென்றல்"லும் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்து மரியாதை செய்ய, வரும் 8-8-59 அன்று ஒரு சிறப்பிதழ் வெளியிடுகிறது. சுவைமிகுந்த பல அம்சங்கள் அதில் அடங்கியுள்ளன. பிற விவரங்கள் அடுத்த இதழில்.

அச்சிறப்பிதழின்

பக்கங்கள் 16 விலை 20 காசு

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு